Registered as a News Paper in Sri lanka


விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU




ரா
ம்
கோ
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/790)


முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 21 ஞாயிற்றுக்கிழமை (03.07.2011) பக்கங்கள் 16 ஓசை – 278



நயினாதீவில் புதிய கலையரங்கம் 02



அம்பாந்தோட்டை எங்களுக்குத் திருப்தி 07



முட்டாள்தனமான கொள்கையை பின்பற்றக் கூடாது 09



கோவிலில் 120, 000 கோடி பெறுமதியான பொக்கிஷம் 12


# வடமராட்சி கிழக்கு பாதை திறந்தது

(மருதங்கேணி)


யுத்தத்தால் சிதைவடைந்த வடமராட்சி கிழக்கின் அடிப்படை வசதிகளும் உட்கட்டுமான வசதிகளும் புனரமைப்புச் செய்யப்பட்டு இன்று முதல் மீண்டும் மக்களின் பயன்பாட்டுக்காக கையளிக்கப்படவிருக்கிறது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் சந்திரசிறி ஆகியோர் இணைந்து மேற்படி மக்கள் நலத்திட்டங்களை ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.

இன்று மதியம் இடம்பெறும் இந்த நிகழ்வுகளின் முக்கிய அம்சமாக பருத்தித்துறையிலிருந்து நாகர்கோவில் மற்றும் மருதங்கேணியூடாக ஆழியவளைக்குச் செல்லும் கரையோர நெடுஞ்சாலை நீண்ட கால இடைவெளிக்குப்பின்னர் மக்கள் பாவனைக்காக மீண்டும் திறந்துவைக்கப்படவிருக்கிறது.




மேலும் இராமாவில், குடத்தனை ஆகிய இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருக்கும் மக்கள் அனைவரும் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர். வெற்றிலைக்கேணி, முள்ளியான், போககறுப்பு, சுண்டிக்குளம் ஆகிய (15 ஆம் பக்கம் பார்க்க)



# டக்ளஸின் கோரிக்கைகள் அமுல் பசில் ராஜபக்ஷ பெருமிதம்

(யாழ்ப்பாணம்)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் வேண்டிக்கொண்டதற்கிணங்க பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் வடபகுதியில் நடைபெற்று வருகின்றன. ஆனால தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அவ் அபிவிருத்தித் திட்டங்களின் குறைகளைச் சுட்டிக்கொண்டிருக்கின்றனரே தவிர அவர்கள் எதுவும் செய்வதில்லை என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற வடமாகாண முன்பள்ளி ஆசிரியர்களின் கௌரவிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமைச்சர் பசில் ராஜபக்ஷ மேலும் தெரிவிக்கையில்,

முன்பள்ளி ஆசிரியர்களாகிய நீங்கள் ஒரு தேசியக் கடமையைச் செய்துகொண்டிருகின்றீர்கள். உங்களுக்கு வழங்கப்படுகின்ற கொடுப்பனவு நாட்டின் தென்பகுதியில் எந்த முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் வழங்கப்படவில்லை. (15 ஆம் பக்கம் பார்க்க)

# சுதந்திரக் கட்சி கொழுக்கட்டை என்றால் ஐ.தே.க மோதகம்; உள்ளுடன் ஒன்றுதான்

## சொல்வது சிவாஜிலிங்கம்



(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் இலட்சக்கணக்கான வாக்குகளை வழங்கி சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்கியமை வீண் செயல் என்று பெரும்பாலான தமிழ்மக்கள் தற்போது உணர்ந்துகொள்ளத் தொடங்கியுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக்கட்சியும் ஒன்று விரியன் பாம்பு என்றால் மற்றது புடையன் பாம்பு. ஒன்று கொழுக்கட்டை என்றால் மற்றையது மோதகம் - உள்ளுடன் ஒன்றுதான்.

இவ்வாறு ஊடகங்களுக்கான அறிக்கையில் ரெலோ அரசியல் தலைவர் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

தேவையற்ற அதிகாரங்களைத் தமிழ் மக்கள் கோரக்கூடாது. சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்ற பொன்சேகாவின் சமீபத்திய பொன்மொழிகளைக் கேட்டு தமிழ் மக்கள் மீண்டும் அதிர்ச்சியடைந்திருக்கிறார்கள்.

இலங்கை சிங்களவர்களுடைய (15 ஆம் பக்கம் பார்க்க)

# ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் சிவபூமி மாணவனுக்கு பதக்கம்



(நெல்லியடி)

கோண்டாவில் சிவபூமி பாடசாலையில் இருந்து ஏதென்ஸ் நகரில் இடம்பெறும் மனநலம் குன்றியவர்களுக்கான ஒலிம்பிக் போட்டிக்குச் சென்ற சி.துஸ்யந்தன் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

நேற்று இடம்பெற்ற 4X100 அஞ்சலோட்டப் போட்டியில் இரண்டாம் இடம்பெற்ற இவர், இன்று இடம்பெறும் 100 மீற்றர் ஓட்டம், நீளம் பாய்தல் போட்டிகளின் இறுதிப் போட்டியிலும் பங்குகொள்கின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (12)

## உண்டியல் திருட்டு


(குருநகர்)

குருநகர் உத்தரிய மாதா தேவாலயத்தில் நிலத்துள் தாட்டு வைத்திருந்த உண்டியலை அப்படியே திருடர்கள் கிளப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை இரவு ஆலயக் கதவுகளை திருகித் திறந்து கொண்ட திருடர் அங்கு நிலத்தை தகர்த்து உண்டியலைத் தூக்கிச் சென்றுள்ளனர்.

ஆலயத்தின 3 உண்டியல்களில் சில தினங்களுக்கு முன்பாகவும் ஒரு உண்டியல் உடைத்து காணிக்கை செலுத்தப்பட்டிருந்த பணம் திருடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஈ.பி.டி.பி. வேட்பாளர்களுடன் பசில் ராஜபக்ஷ சந்திப்பு




(யாழ்ப்பாணம்)

எதிர் வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுகந்திரக் கட்சியில் போட்டியிடும் வேட்பாளர்களை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

நேற்றுக் காலை யாழ். விஜயம் செய்த அமைச்சர் பசில் ராஜபக்ஷவை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொன்னாடை போர்த்தி வரவேற்றார். பின்னர் யாழ். ராஜா ஹவுஸ் மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் அமைச்சர் கலந்து கொண்டார்.

இதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி, மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா மற்றும் வேட்பாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# முன்னாள் புலிகள் வரைந்த சித்திரங்கள் கண்காட்சிக்கு



(வவுனியா)

வவுனியா - பூந்தோட்டம் கூட்டுறவுக்கல்லூரியில் இயங்கும் சரண் அடைந்த புலி உறுப்பினர்களின் புனர்வாழ்வு நிலையத்திற்கு நேற்று சனிக்கிழமை காலை விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர சரண் அடைந்த புலி உறுப்பினர்களினால் வரையப்பட்ட சித்திர கண்காட்சியையும், சரண் அடைந்த பெண் புலி உறுப்பினர்களினால் தயாரிக்கப்பட்ட கைப்பணிப் பொருட்களையும் பார்வையிட்டதுடன், அவர்களுடனும் உரையாடினார்கள்.

இந்த வைபவத்தில் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுனந்த ரணசிங்க, அமைச்சின் செயலாளர் எஸ்.திசாநாயக்கா, பாதுகாப்புப் படை உயர் அதிகாரிகள் அமைச்சின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இந்த சித்திரக் கண்காட்சியினை கூடியவிரைவில் சர்வதேச மட்டத்திற்கு காட்டக்கூடியவகையில் சில நிலையங்கள் தெற்கில் ஆரம்பிக்கப்படும். நீங்கள் வீடு திரும்பியதும் இந்த தொழில் பயிற்சிகள் உங்களுக்கு வருமானத்தை தரக்கூடியது உங்கள் அனைவருக்கும் நல்ல எதிர்காலம் அமைய பிரார்த்திக்கின்றேன் என நாமல் ராஜபக்ஷ தனது உரையில் குறிப்பிட்டார். (39)

# இரணைமடுவில் நன்னீர் மீன் பிடிக்கு அனுமதி

(கொழும்பு)

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தில் நீண்டகாலமாக இருந்து வந்த தடை நீக்கப்பட்டு நேற்று முதல் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை 5.00 மணிக்கு விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோர் இணைந்து மீன்பிடியை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தனர்.

மக்கள் மீள்குடியேறியபின் இரணைமடுப் பகுதியில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து அப்பகுதி மீனவர்கள் இதற்கான அனுமதியினை பெற்றுத்தருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரிடம் தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுத்து வந்தனர். இந்நிலையில் அவர் மேற்கொண்ட பெருமுயற்சியின் பயனாக நேற்று முதல் இப்பகுதியில் மீன்பிடிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



இவ்வைபவத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் உரையாறும் போது மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டிருப்பதன் மூலம் இப்பகுதி மக்களின் வாழ்வாதாரமேம்பாட்டிற்கு ஒரு பலமான அத்திவாரம் இடப்பட்டிருக்கின்றது. இவ்விடயத்தில் எம்மோடு இணைந்து பாடுபட்டதோடு, நேரடியாக இங்கு வருகை தந்து மீன்பிடியை ஆரம்பித்துவைத்த கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அவர்களுக்கு மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் கீதாஞ்சலி, கிளிநொச்சிமாவட்ட கட்டளைத்தளபதி நந்தன உடவத்த மற்றும் பாதுகாப்பு படை அதிகாரிகள் நன்னீர் மீன்பிடிச் சங்கத் தலைவர், சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# நயினை ஆலயத்தில் புதிய கலையரங்கம் திறப்பு



(நயினாதீவு)

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தில் புதிதாகப் புனரமைக்கப்பட்ட ஸ்ரீ புவனேஸ்வரி கலையரங்கத் திறப்புவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கொடியேற்றத்தைத் தொடர்ந்து இரவுத் திருவிழாவின் போது கலையரங்கத் திறப்பு விழாவும் சிறப்பாக இடம்பெற்றது. ஆலய அறங் காவலர் சபைத் தலைவர் கா. ஆ.தியாகராசா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வேத மந்திரங்கள் முழங்க தலைவர் கா.ஆ.தியாகராசா திறந்த வெளிக்கலையரங்கத்தைத் திறந்து வைத்தார்.

எமது பண்பாட்டைப் பிரதிபலிக்கக்கூடிய கலையம்சங்களுக்கு முதன்மை கொடுத்து இந்திய சிற்பாசாரி புருசோத்தமன் குழுவினரால் இத்திறந்த வெளிக கலையரங்கம் மிக அழகாக அமைக்கப்பட்டுள்ளது. இக்கலையரங்கத்தில் திருவிழாக் காலங்களில் இரவு 8.00 மணி தொடக்கம் 9.00 மணி வரை சொற்பொழிவுகள் இடம்பெறுமென அறங்காவலர் சபையினர அறிவித்துள்ளனர்.

அந்த வகையில் திறந்து வைக்கப்பட்ட புதிய கலையரங்கத்தின் முதலாவது தெய்வீகப் பேருரையை நேற்றிரவு கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் எஸ்.லலீசன் (நீர்வைக்கிழார்) 'போற்றுவோம் தையலையே' என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவினை நிகழ்த்தினார்.

நயினாதீவு 64 சக்தி பீடங்களுள் ஒன்றாக அமையும் ஸ்ரீ புவனேஸ்வரி பீடம் என அழைக்கப்படுகின்றது. இதனைச் சிறப்பிக்கும் வகையிலேயே இங்குள்ள கலையரங்கம் ஸ்ரீ புவனேஸ்வரியின் பெயரால் அமைக்கப்பட்டிருக்கின்றது.

# நினைவுப் பேருரையும் பிறந்தநாள் விழாவும்

(திருநெல்வேலி)

திருநெல்வேலியில் அமைந்துள்ள சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்துபோட் இராசரத்தினம் பிறந்தநாள் விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு சங்க ஆராதனை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில், முதன்மை விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

'இந்துப் பண்பாட்டுக் கல்விச் சிந்தனை மரபு' என்ற தலைப்பில் நினைவுப் பேருரையினை யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன் நிகழ்த்தவுள்ளார்.



வவுனியா- பூந்தோட்டம் ஸ்ரீலஷ்மி சமேத நரசிங்கர் ஆலய வருடாந்த பொங்கல் விழா உற்சவத்தை முன்னிட்டு நேற்று பகல் சனிக்கிழமை வவுனியா நகர் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து செடில் மற்றும் பறவை காவடிகள் புறப்பட்டு நகர் வீதி ஊடாக நரசிம்மர் ஆலயத்தினை சென்றடைந்தது பெருமளவிலான செடில் காவடிகள் ஊர்வலத்தில் இடம்பெற்றிருந்தது



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் அக்கராயன் மகா வித்தியாலயத்திற்கு வழங்கப்பட்ட நிதிக்கான காசோலையினை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கரைச்சி பிரதேச வேட்பாளரும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளருமாகிய ச.பாஸ்கரன் பாடசாலை அதிபரிடம் கையளிப்பதையும், அருகில் கட்சி ஆதரவாளர்களையும் காணலாம். (121)


## மனோதத்துவ வைத்தியம்

## General Psychotheraphy

**யாழ்ப்பாணத்தில் 05.07.2011 தொடக்கம் 10.07.2011 வரை**

**உலகெங்கும் வாழும் தமிழ், முஸ்லீம் மக்களிற்கு அறிமுகமான பிரபல மனோதத்துவ Dr.P ஆறுமுகம் அவர்கள் பல நூற்றுக்கணக்கான இளைஞர்களின் இல்லற வாழ்க்கைக்குப் புத்துயிர் கொடுத்து பலரின் பாராட்டையும் பெற்றுள்ளார்.**

**யாழ்ப்பாணத்தில் குழந்தை இல்லாமல் இருந்த சிலருக்கு எனது மனோதத்துவ வைத்தியம் மூலம் குழந்தை கிடைத்தமைக்கு ஆதாரம் உண்டு.**

**தொடர்புகளுக்கு :-**

கமல் ரூ ரிஸ்ற் இன்,
392 /A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(சிவதர்சன் பாட்ஸ் கடைக்கு மேல்)
தொ.பே.இல - 0214922403
Hotline - 0719315664, 0777569205

C/787

உருவத்தில் மனிதனாகவும், குணத்தில் மிருகமாகவும் இருக்கக்கூடாது, மனிதத்தன்மையில் இருந்து தெய்வத் தன்மை பெற வேண்டும். அது முடியாவிட்டால் மிருகத் தன்மைக்காவது போகாமல் இருக்க வேண்டும்.

-வாரியார்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## பொன்சேகாவும் பொன்மொழிகளும்!

தமிழர்கள் தேவையற்ற அதிகாரங்களைக் கோராமல் சிங்களவர்களுடன் சேர்ந்துவாழப் பழகவேண்டும் என்று சமீபத்திலும் தனது உள்ளக் கிடக்கையைக் கருத்தாக உதிர்த்திருக்கிறார் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா.

வழக்கு விசாரணையில் சமுகமளிப்பதற்காக நீதிமன்றத்திற்கு வந்திருந்தபோதே ஊடகவியாளர்களிடம் பேசுகையில், இந்தப் பொன்மொழியை மீண்டும் உதிர்த்திருக்கிறார். இவர் தளபதியாக இருந்த காலத்திலேயே கனடிய ஊடகமொன்றுக்கு அளித்த பேட்டியிலும் இதே விதமான அபிப்பிராயத்தை வெளியிட்டிருந்தார். அதாவது பெரும்பான்மை இனத்தவருடன் அனுசரித்து வாழ தமிழ் மக்கள் பழகிக்கொள்ள வேண்டும் என்பதே இந்த இராணுவத் தளபதியின் மாற்றமுடியாத எண்ணமாக இருந்து கொண்டிருக்கிறது.

பெரும்பான்மை இனமென்ற விருட்சத்தைச் சுற்றிப் படரவேண்டிய செடிகள் தான் சிறுபான்மை இனங்கள் என்ற பேரினவாத சிந்தனையிலிருந்து வந்த மற்றொரு மகா இனவாதிதான் இந்த இராணுவத் தளபதி என்பதை, அவர் தேர்தல் அரசியலுக்கு வருமுன்பே தெளிவுற வெளிக்காட்டியிருந்தார்.

ஆனால் இதை அறிந்திருந்தும், வதையிலிருக்கும் மக்களிடமிருந்தே உணர்ச்சிகரமாக வாக்குப் பறிக்கமுடியும் என்பதை தெரிந்துவைத்திருக்கும் தமிழ்ப் பெரும்பான்மை எம்.பிமார், இராணுவத் தளபதிக்கே தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று கோரியது இன்று வரலாறு!

ரணிலைக் கைவிட்டு மகிந்தவுக்கு வாக்களித்தால் தான் சண்டையைத் தொடர வாய்ப்பு என்று ஒரு தேர்தலில் கருதியது போன்றே, பொன்சேகாவுக்கு வாக்களித்தால் தான் தென்னிலங்கையில் பகைவெறுப்பு அரசியலை வாழவைக்க முடியும்; அதன் மூலம் தமிழ் மக்களுக்கும் உணர்ச்சி ஊசி அடித்தடித்து வாக்குகளை அள்ளிக்கொண்டிருக்க முடியும் என்ற சுயலாபக் கதிரை பிடிப்புக் கணக்குத்தான் அடுத்த தேர்தலில் பொன்சேகாவிற்கு வாக்குப் போடச் சொல்லியது.

இனவாதக் கொந்தளிப்பில் மக்களுக்கு உணர்ச்சி முறுக்கேற்றி அதனால் வரும் அரசியல் இலாபத்தில் குறியாயிருப்பவர்கள், மாற்றுத் தரப்பிலும் இனவாத சக்திகள் அதிகாரத்திற்கு வருவதையே ஊக்குவிப்பர். எதிர்த்தரப்பில் யார் அதிக இனவாதம் பேசுகிறார்களோ அவர்களுடனேதான் இவர்கள் கூட்டும் உறவும் வைத்துக் கொள்வர்.

எதிர்த்தரப்பு வன்முறையை அதிகப்படுத்த அதிகப்படுத்த அதற்கு ஈடாக நம் தரப்பு வன்முறையும் பலமடைய வேண்டுமென மக்கள் விரும்பத் தொடங்குவர் என்பது ஒரு பிரபலமான போராட்ட உத்தி. அதுபோலவே நம் தரப்பில் இனவாதமும் வெறுப்பும் வடிந்துவிடாமல் இருப்பதே நமது அரசியலுக்கும் உணர்ச்சிகர வாக்கு வேட்டைக்கும் உகந்தது என்று கருதுபவர்கள், எதிர்த்தரப்பு இனவாதத்தையும் பகை உணர்ச்சியையும் வளர்த்துவிட்டுக்கொண்டிருப்பதையே செய்வர். அதற்கு வாய்ப்பாகக் கிடைத்தவரே பொன்சேகா. இப்போது அவர் முடக்கப்பட்டுவிட்ட சிங்கம். தமிழ் இனவாதத் தரப்புக்கு இனி இன்னொரு எதிர்த்தரப்பு சகாவைத் தேட வேண்டிய நிலைமை! அது இன்னும் சரியாக உருவாகாததால்தான் இன்றைய இவர்களது அரசியல் 'டல்'லடித்துக் கொண்டிருக்கிறது.

ஆட்சிக்கு வருபவரை அகற்றுவது பற்றியே எப்போதும் குரல் விட்டுக் கொண்டிருப்பதால் ஏதேனும் பெறுவதற்கோ, நிம்மதியான வாழ்வைக் கொண்டுவருவதற்கோ எதையும் பேசத் தயாராயில்லாதவர்களை நம்பி எவ்வளவு காலத்திற்குத்தான் மக்கள் உணர்ச்சிகரப் பேச்சுக்களையே உணவாய் அருந்திக்கொண்டிருக்க முடியும்.

- ஆசிரியர் -

# பல்கலை மாணவருக்கான பயிற்சிநெறி பாரிய வரவேற்பைப் பெற்றுள்ளது

## என்கிறார் உயர் கல்வி அமைச்சர்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்குத் தகுதி பெற்ற மாணவர்களுக்கு வழங்கப்படும் தலைமைத்துவப் பயிற்சிக்குத் தற்போது பெரும் வரவேற்பு இருப்பதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்

இந்த மாணவர்கள் மத்தியில் எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்துவதற்கு இந்த வேலைத்திட்டம் சிறந்த பயனாக அமைந்துள்ளது.

இந்த நாட்டின் பல்கலைக்கழக கல்வியை சர்வதேச தரத்திற்கு உயர்த்த வேண்டும். இதற்காக ஆங்கில மொழிக்கற்கைநெறி அவசியம்.

தகவல் தொடர்பாடல் மற்றும் நவீன கல்வி நடைமுறைகளை எதிர்கால சமூகத்தினருக்கு ஏற்படுத்திக் கொடுப்பதே அரசாங்கத்தின் பணியாகும்.

இராணுவத் தலைமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சியின் பணிப்பாளர் பிரிகேடியர் ரூவான் வணிகசேர இது தொடர்பாகத் தெரிவிக்கையில்-

இதுவரையில் 29 மத்திய நிலையங்களில் தலைமைத்துவப் பயிற்சி வெற்றிகரமாக இடம்பெற்று வருகிறது. அனைத்து மத்திய நிலையங்களிலும் மாணவர்களுக்குத் தேவையான சகல வசதிகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தப் பயிற்சியை சிலர் இராணுவப் பயிற்சி என்று



தபபாக அர்த்தப்படுத்தி சமூகத்தைத் தவறாக வழிநடத்த முயற்சித்தனர்.

உயர் கல்வியின் பின்னர் சமூகத்துடன் ஒன்றிணையும் இந்த மாணவர்களுக்கு இந்தப் பயிற்சியின் பெறுமதியை அறிந்துகொள்ள முடியும். அதனுடன் இப்பயிற்சி மூலம் மாணவர்கள் முழுமையான மனிதராகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வலி.வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் கிராம அலுவலருக்கு கட்டடம் அமைப்பு

(தெல்லிப்பளை)

வலி.வடக்குத் தெல்லிப்பளைப் பிரதேச செயலகப் பிரிவில் மீளக்குடியேறிய 12 கிராம சேவையாளர் பிரிவுகளில் 9 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு 1.34 மில்லியன் ரூபா செலவில் கிராம அலுவலகக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

கிராம சேவையாளர்களுக்கென அமைக்கப்படும் இக்காரியாலயத்தில் வ்விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் அலுவலகம், குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர் அலுவலகம், சமுர்த்தி உத்தியோகத்தர் அலுவலகம் என்பன இயங்கவுள்ளன.

இக்கட்டடங்களைக் கட்டியெழுப்புதவற்கு 3 மாத கால அவகாசம் கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவை தொடர்பாக நேற்றுமுன்தினம் தெல்லிப்பளைப் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் தலைமையில் ஆராயப்பட்டது.

இக்கட்டடத்தில் 12 கிராம சேவை அலுவலர்கள் உதவித்திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் தொண்டு நிறுவனங்கள், கட்டட ஒப்பந்தகாரர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதில் ஜே.221 இளவாலை வடக்கு, ஜே.223 வித்தகபுரம், ஜே.226 நகுலேஸ்வரம், ஜே.230 தந்தை செல்வாபுரம், ஜே.231 மற்றும் ஜே.232, ஜே. 224 பன்னாலை, ஜே.229 துர்க்காபுரம், ஜே.243 குரும்பசிட்டி கிழக்கு ஆகிய 9 கிராம சேவையாளர் பிரிவுகளில் தலா 16 இலட்சம் ரூபா செலவில் அலுவலகக் கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# மக்களின் முறைப்பாடுகளுக்கு 5 நாட்களுக்குள் தீர்வு வழங்கப்படும்

## கிளி, முல்லை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் உறுதி

(முரசுமோட்டை)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள பொலிஸ் நிலையங்களில் மக்களால் பதிவு செய்யப்படும் முறைப்பாடுகள் அனைத்தும் ஐந்து நாட்களுக்குள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு அவர்களுக்குரிய தீர்வுகள் வழங்கப்படும். தமிழிலேயே முறைப்பாடுகள் பதிவு செய்யலாம் என கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நீல் டல்வத்த தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்-

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் யுத்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டுப் போயிருக்கின்றனர். இந்த மக்களுக்குக் கூடுதலான சேவைகளை வழங்க வேண்டிய பொறுபபுஎங்கள் எல்லோரிடத்திலும் இருக்கின்றது.

இழப்புக்களையும் அழிவுகளையும் சந்தித்த இம்மக்களுக்கு நாங்கள் பொருட்களையும் பணத்தையும் கொடுத்து ஈடுசெய்ய முடியாது. மாறாக அவர்களுக்குச் சரியான முறையில் சேவை செய்வதன் மூலமே அவர்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்தி அவர்களைத் திருப்திப்படுத்த முடியும். மேலும் சமூகத்தில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் நடமாடும் சேவைகளை நடத்தி அதன் மூலம் மக்களுக்குச் சேவை வழங்க இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதிப் பொலிஸ் மா அதிபர், பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் சாலிய சில்வா, மக்கள் தொடர்பாடல் பொறுப்பதிகாரி எம்.எஸ். காப்பீன் மற்றும் குறித்த மாவட்ட ஊடகவியலாளர்களும் கலந்துகொண்டனர். (110, 27)

# நடமாடும் மருத்துவ சேவையை விஸ்தரிப்பதற்கு நிதியுதவி கோரும் செஞ்சிலுவை யாழ்.கிளை

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். பிரிவினர் தம்மால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடமாடும் மருத்துவ சேவையினை மேலும் விஸ்தரிதப்பதற்குத் தம்மிடம் நிதிப்பற்றாக்குறையாக உள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். பிரிவினரது நடமாடும் மருத்துவ சேவை ஒன்று தற்சமயம் வடமராட்சி கிழக்குப் பகுதிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இதற்குச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நிதியுதவி வழங்கி வருகின்றது.

இது தவிர பிரசித்தி பெற்ற சில ஆலயங்களின திருவிழா நிகழ்வுகளின் போதும் மற்றும் அவசர நிகழ்வுகளின்போதும் அவர்களால் நடமாடும் மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் வருமான மூலங்களும் சொற்ப அளவிலேயே உள்ளது. அவற்றின் மூலம் பெறப்படும் வருமானங்கள் நிர்வாகச் செலவுகளுக்கே போதுமானதாகவுள்ளது.

எனவே நெருக்கடி காலத்திற்கான நடமாடும் மருத்துவ சேவையினை மேம்படுத்த வேண்டிய தேவையும் உணரப்பட்டுள்ள நிலையில் இதற்கான நிதியுதவியினை உதவி அமைப்புக்களிடம் இருந்தும், பொது நிறுவனங்களிடமிருந்தும் தாம் எதிர்பார்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (பா)

# கிராம மக்களின் சேமிப்புப் பழக்கம்; மக்கள் வங்கியே வளர்த்தெடுத்தது

## யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பாராட்டு

(நல்லூர்)

கிராமிய மக்களின் தேவைகளை அறிந்து அவர்களை நாடிச் சென்று வங்கிச் சேவைகளை அவர்களுக்கு வழங்கி அவர்களிடம் சேமிப்புப் பழக்கத்தை வளர்த்த பெருமை மக்கள் வங்கியையே சாரும் என யாழ். பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் கூறினார்.

மக்கள் வங்கியின் 50ஆவது பொன் விழா நேற்று முன்தினம் காலை வங்கியின் பிரதான வீதிக் கிளையில் நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வங்கி முகாமையாளர் எம். சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதேச செயலர் மேலும் தெரிவிக்கையில், வங்கிகள் மக்களுக்கு சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பனவாகச் செயற்பட வேண்டும். அத்துடன் மக்களின் வாழ்வாதாரத்தை விருத்தி செய்வதன் மூலமே அவர்களின் வருமானத்தை அதிகரிக்கச் செய்வதற்கும், கிராமத்துக்குள் சென்று வறிய மக்களுடன் பழகி அவர்களுக்கான உதவிகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்நிகழ்வில் ஆசியுரையினை பாசையூர் அந்தோனியார் கோவிலின் பங்குத் தந்தை வழங்கினார்.

பொன்விழா ஞாபகார்த்தமாக, 50 ஆண்டுகள் வடிவத்தைக் கொண்ட கேக் ஒன்று வெட்டப்பட்டதுடன், நிகழ்வின் இறுதியில் பலூன்களும் பறக்க விடப்பட்டன.

பொன்விழா நிகழ்வில்,



சுண்டுக்குழி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி துசிதரன், தபால் அதிபர் அத்தியட்சகர் இரட்ணசிங்கம் உட்பட வாடிக்கையாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். (26)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை திருநாவலூர் மருதங்கேணி மாரியம்மன்கோவில் மகா கும்பாபிஷேகம் இன்று காலை 9.15 மணிக்கு நடைபெறவுள்ளது.

கோயிலின் பிரதம குரு கிரியா கிரியஜோதி சிவஸ்ரீ குஞ்சித பாதக்குருக்கள் தலைமையில் கும்பாபிஷேக நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்ததுடன், இந்நிகழ்வில் பக்தர்கள் அனைவரையும் கலந்து கொண்டு அருள் பெறவும் வேண்டுகின்றனர்.

□□□

வரணி வடக்கு நாச்சிமார் கோவில் மகா கும்பாபிஷேகம் இன்று காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளதென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

## நடமாடும் நிவாரண சேவை

(அரியாலை)

அரியாலை கிழக்குப் பூம்புகார் நாவலடி மற்றும் மணியந்தோட்டப் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கான கடந்த யூன் மாதத்திற்கான உலர் உணவுப் பொருட்கள் விநியோகிக்கப்படவுள்ளது.

அரிசி, சீனி, மா, பருப்பு போன்ற பொருட்கள் நிவாரணத்திற்கு வழங்கப்படவுள்ளது.

இதற்கான பொருட்கள் யாழ்ப்பாண ப.நோ.கூ. சங்க லொறிகளின் விசேட நடமாடும் சேவை ஊடாக அப்பகுதிகளில் வைத்து மக்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளது. (வி)

## விவசாய உபகரணங்கள்

(கட்டுவன்)

உணவு விவசாய ஸ்தாபனத்தினால் (FAO) தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவில் தற்போது மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள மக்களுக்கான விவசாய உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. தெல்லிப்பளை பிரதேச ப.நோ.கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் வைத்து இந்த உபகரணங்கள் வழங்கப்படவுள்ளது. (22)

# மெனிக்பாம் முகாமிலிருந்த மக்கள் புதுக்குடியிருப்பில் மீள்குடியேற்றம்

(முல்லைத்தீவு)

மெனிக்பாமில் இருந்து மற்றுமொரு தொகுதி மக்கள் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் சுதந்திரபுரம், உடையார்கட்டு வடக்கு கிராம சேவையாளர் பிரிவுகளில் கடந்த வியாழக்கிழமையன்று மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

முகாமில் இருந்து அழைத்து வரப்பட்ட இம்மக்கள் உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் கடந்த புதன்கிழமை அன்று தங்கவைக்கப்பட்டு மறு நாள் வியாழக்கிழமை அவரவர் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டனர் எனவும் தெரிய வருகின்றது.

ஏற்கனவே புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் இருட்டுமடு, சுதந்திரபுரம், வள்ளிபுனம், தேவிபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஒரு தொகுதி குடும்பங்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்தும் இப்பகுதிகளில் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருக்கும் மக்கள் மீள்குடியமர்த்தப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

அவ்வாறானவர்கள் எதிர்வரும் 5ஆம் திகதி மீள்குடியமர்வுக்கு ஏற்ற ஆயத்தத்துடன் உடையார்கட்டு மகாவித்தியாலயத்திற்கு காலை 9.00 மணிக்கு சமூகமளிக்கும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (பா)

# குடாநாட்டு நீர் நிலைகளில் குறைவடைகிறது நீர்மட்டம்

(யாழ்ப்பாணம்)

தற்போதைய கடும் வரட்சியால் குடாநாட்டில் உள்ள நீர் நிலைகளில் தண்ணீர் மட்டம் வெகுவாகக் குறைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குளங்கள் மற்றும் கிணறுகளில் இந்தத் தண்ணீர் மட்டம் திடீரென வற்றிக் காணப்படுவதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

அநேகமான குளங்களில் தண்ணீர் முழுமையாக வற்றும் நிலையில் காணப்படுகின்றது.

குளங்களில் தண்ணீர் வற்றியதால் குளத்தைச் சூழவுள்ள மக்கள் குடியிருப்புக் கிணறுகளிலும் தண்ணீர் மட்டம் வெகுவாகக் குறைந்து காணப்படுகின்றது.

தற்போதைய கடும் வரட்சி வெப்பம் கடந்த ஆண்டிலும் பார்க்க இந்த ஆண்டு அதிகரித்துக் காணப்படுவதாக வானிலை அவதான நிலைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (வி)





நல்லூர் பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் நிதி அனுசரணையுடன் நடத்தப்பட்ட சிறுவர் மற்றும் பெண்களுக்கான வலுவூட்டல் நிகழ்ச்சி சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் ஆகியோர் பயனாளிகளுக்கு உதவிகளை வழங்குவதை காணலாம்.

# தென்பகுதிக்குச் செல்லும் பால்; யாழ். குடாநாட்டில் தட்டுப்பாடு

(சுன்னாகம்)

யாழ். குடாநாட்டில் ஏற்பட்டுள்ள பால் தட்டுப்பாட்டை நீக்குமுகமாக யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் பாலினை பல்வேறு பகுதிகளில் இருந்தும் கொள்வனவு செய்து அவற்றை பொதி செய்து விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளது.

பாலுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நீக்குதற்கு மீசாலை, கைதடி, பண்டத்தரிப்பு போன்ற தூர இடங்களில் இருந்து பசுப்பாலைக் கொள்வனவு செய்து திருநெல்வேலியில் உள்ள பால்சாலையில் அதைப் பொதி செய்து கிளைகளுக்கு விற்பனைக்கு அனுப்பி வருகின்றது.

இந்தப் பிரதேசத்தில் அதிகளவு பால் உற்பத்தி செய்யப்படுகின்ற போதிலும், அவற்றைக் கொள்வனவு செய்து சேகரித்துக் கையாள்வதற்கான குளிர்தாட்சிகள் பழுதடைந்துவிட்டதால் கூடுதல் பாலைக் கொள்வனவு செய்து விநியோகம் செய்ய முடியாத நிலை மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, 3000 லீற்றர் கொள்ளளவுடைய பெரிய பால் தாட்சிகள் கொள்வனவு செய்யப்படவேண்டும் எனச் சங்கம் தீர்மானித்துள்ளது.

இதேவேளை, தென்பகுதியில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்று பாலைக் கொள்வனவு செய்து தென்பகுதிக்கு கொண்டு செல்கிறது. இதனாலேயே பாலுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார். (120)

## 58 குடும்பங்களுக்கு காணிகள் கையளிப்பு

(கிளிநொச்சி)

இயக்கச்சி பனிக்கையடி கிராமத்தில் 58 காணியற்ற குடியிருப்பாளர்களுக்கு கால் ஏக்கர் வீதம் காணிகள் வழங்கப்பட்டுள்ளன. இப்பிரதேசம் விரைவில் அனைத்து உட்கட்டுமான வசதிகள் மற்றும் இதர வசதிகள் கொண்ட நவீன மாதிரிக் கிராமமாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

மாதிரிக் கிராமமாக இதனை மாற்றியமைக்கும் நடவடிக்கை மூலம் இப்பகுதி மக்களுக்கான மின்சாரம், குடிநீர் வசதி உட்பட பல்வேறுபட்ட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன.

## தொழிற்பயிற்சி மைய திறப்பு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

சைவ வித்தியால விருத்திச் சங்கத்தினால் இந்துபோட் இராசரத்தினம் தொழில் பயிற்சிமைய திறப்பு விழா நாளை திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு இணுவில் செக்கிலிப்பாய் ஒழுங்கையில் அமைந்துள்ள சைவர் சிறுவர் இல்லக் கிளையில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் சோ. பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக இளைப்பாறிய பிரதி அதிபர் புலவர் ஏ.சி. சண்முகலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் ஆசியுரையை இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் கோயில் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ வை. சோமாஸ்கந்தக் குருக்கள் வழங்கவுள்ளதுடன், வாழ்த்துரைகளை செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன், பேராசிரியர் அ. சண்முகதாஸ், அ.தற்பரானந்தன், பெ. கனகசபாபதி, செ. சோதிப்பெருமாள் ஆகியோர் வழங்கவுள்ளனர். தொடர்ந்து சிறப்புரையை யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியின் மேலதிக பணிப்பாளர் வி. சுந்தரலிங்கம் ஆற்றவுள்ளார்.

# போசாக்கு இன்மையை குறைப்பதற்கு மாணவர்களுக்கு காலை உணவு அவசியம்

## சுகாதார வைத்திய அதிகாரி ஆலோசனை

(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் 30 வீதமான மாணவர்கள் போசாக்கு குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளனர். பாடசாலைப் பிள்ளைகள் போஷாக்கின்மையைக் குறைப்பதற்கு காலை உணவைக் கட்டாயம் உட்கொள்ள வேண்டும் என்று நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ.சிவசங்கர் தெரிவித்தார்.

கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் அதிபர் சு.சண்முககுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எமது பிரதேசத்து மாணவர்களில் பெரும்பாலானோர் காலை உணவை உட்கொள்ளாமலேயே பாடசாலைக்குச் செல்கின்றார்கள்.

பாடசாலைக்கு நேரத்துக்கு வரவேண்டுமென்ற அவசரம், காலையில் தனியார் கல்வி நிலையம் சென்றுவிட்டு நேரடியாகப் பாடசாலைக்குச் செல்லல் போன்ற காரணங்களால் அவர்கள் காலை உணவை எடுப்பதில்லை. பெற்றோர்கள் இவ்விடயத்தில் கவனமெடுக்கவேண்டும்.

பிள்ளைகளின் உடல், உள, சமூக, ஆன்மீக விருத்திக்கும் கற்றவற்றை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவும் மூளைச் செயற்பாடுகளுக்கும் புரதச்சத்து அவசியமாகும்.

திருமணம், பூப்புனிதநீராட்டு, பிறந்தநாள் போன்ற வைபவங்களுக்குப் பெருந்தொகைப் பணத்தைச் செலவு செய்வதை விட்டு, மக்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கு வேண்டிய போஷாக்குள்ள உணவைப் பெறுவதற்குச் செலவு செய்யவேண்டும்.

எனவே, மக்களிடையே நிலவும் அறியாமையை நீக்கி அனைவரும் ஒன்றிணைந்து ஆரோக்கியமான சமுதாயம் ஒன்றைக் கட்டியெழுப்ப முன்வர வேண்டும் எனவும் குறிப்பிட்டார். (10)



வன்னிக்கான போக்குவரத்து சேவைகள் அதிகரித்துள்ளதை அடுத்து வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி நகரப் பகுதியிலுள்ள வீதிகள் புனரமைப்பு செய்யப்பட்டு வருவதைக் காணலாம். (77)

## வெங்காயத் தோட்டங்களில் காவல் இருக்கும் விவசாயிகள்

(கோப்பாய்)

வலி.கிழக்கு பிரதேசத்தில் நடுகை செய்யப்பட்ட வெங்காயப் பயிர்களுக்கு விவசாயிகள் இரவில் காவல் கடமைகளில் ஈடுபட்டு வருகின்றனர். நீர்வேலி, கோப்பாய், புத்தூர், சிறுப்பிட்டி, நவக்கிரி, ஆவரங்கால் போன்ற தோட்டங்களில் அறுவடைக்குத் தயாராகும் வெங்காயப் பயிர்களுக்குத் காவல் போடப்பட்டுள்ளது.

கோப்பாய், நீர்வேலிப் பகுதிகளில் உள்ள அநேகமான தோட்டங்களில் விளையும் முன்னரே திருடர்கள் வெங்காயங்களை பிடுங்கிச் செல்வதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (வி)

## வெங்காயப் பூவுக்கு கிராக்கி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் வெங்காயப் பூவுக்குப் பெரும் மவுசு ஏற்பட்டுள்ளது. இந்த வெங்காயப் பூ குறைந்தளவே சந்தைகளுக்கு வந்து சேர்வதால், அவற்றின் விலைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. ஒரு கிலோ வெங்காயப்பூ 350 ரூபா முதல் 400 ரூபா வரை விற்கப்படுகின்றது. இந்த வெங்காயப்பூவின் விலையையும் பொருட்படுத்தாது நுகர்வோர் அதை முண்டியடித்துப் பெற்றுச் செல்கின்றனர். (வி)

## குறிகாட்டுவான் துறையில் அத்தியாவசிய சேவைகள்

(நயினாதீவு)

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் திருவிழாவுக்குச் செல்லும் பக்தர்களின் வசதி கருதி, குறிக்கட்டுவான் துறையில் சகல அத்தியாவசிய சேவைகளும் செய்யப்பட்டுள்ளன. வேலணைப் பிரதேச சபையின் புங்குடுதீவு உப.அலுவலகத்தினால் இந்த அத்தியாவசியப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சுகாதாரம், குடிநீர், மலசல கூடம் மற்றும் பயணிகள் இளைபபாற்று மண்டபம் போன்றவை துறையில் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வி)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(03.07.2011 – ஞாயிற்றுக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்
ஆனி 18 ஆம் நாள்.
இராகுகாலம் 4.27–5.57, சுபநேரம் 8.57 –10.27,
நட்சத்திரம் பூசம் மு.இ. 11.07 வரை
திதி: துதியை பி.ப. 12.58 வரை

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– பண வரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, காரிய சித்தி, தேக ஆரோக்கியம்.

ரிஷபம்:– பண வ[illegible]வு, தேக ஆரோக்கியம், நண்பர் வ[illegible]கை, குடும்பத்தில் குதூகலம், திருடர் பயம்.

மிதுனம் :– பணக் கஷ்டம், உடல்நலக் குறைவு, மனச் சஞ்சலம், விபத்து வரக்கூடும்.

கடகம்:– பண வரவு, தேக ஆரோக்கியம், மூத்தோர் ஆசி, திடீர் பயணம்.

சிம்மம்:– குடும்பத்தில் குதூகலம், பண வரவு, திடீர் பயணம், நண்பர் தொல்லை.

கன்னி :– தேக நலக்குறைவு, தொழில் விருத்தி, உறவினர் பகை, குழப்பம்.

துலாம் :– பண வரவு, தேக ஆரோக்கியம், அயலவர் தொல்லை, வீண் அலைச்சல்.

விருச்சிகம்:– பண வரவு, குடும்பத்தில் குதூகலம், நண்பர் தொல்லை, வீணான கற்பனை.

தனுசு:– பணக் கஷ்டம், தொழில் நஷ்டம், மனக் குழப்பம், வீண் அலைச்சல்.

மகரம்:– பண வரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, நண்பர் வருகை, தெய்வ சிந்தனை.

கும்பம் :– பண வரவு, குடும்பத்தில் நிம்மதி, மகிழ்ச்சி, தெரு விபத்து.

மீனம்:– பண வரவு, தேக ஆரோக்கியம், மூத்தோர் சந்திப்பு, சுபகாரியப் பேச்சு, மன மகிழ்ச்சி.

## அக்கராயன்குள முதன்மை வீதி 3 மில்லியன் செலவில் புனரமைப்பு

(அக்கராயன்)

கிளிநொச்சி - அக்கராயன்குளத்தில் முதன்மை வீதியொன்று புனரமைக்கப்பட்டு வருகின்றது.

மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் இவ்வீதி புனரமைக்கப்படுகிறது. அக்கராயன் மகா வித்தியாலய சூழலில் ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரம் கொண்ட இவ்வீதி 3 மில்லியன் செலவில் புனரமைக்கப்படுகிறது.

இதன் தொடக்க நிகழ்வு அக்கராயன் அபிவிருத்தி அமைப்பு தலைவர் இ.உமாறஞ்சிதன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு வீதியின் புனரமைப்புப் பணிகளைத் தொடக்கி வைத்தார்.

இந் நிகழ்வில் கிளிநொச்சி மீள் எழுச்சிப் பிரதித் திட்டப் பணிப்பாளர் இராச சிவேந்திரன், திட்டப் பொறியியலாளர் ஆர்.சயந், மேம்பாட்டு உத்தியோகத்தர் எ.பபிகரன், மீள் எழுச்சித் திட்ட சமூகவூட்டலாளர் குகதாசன், அக்கராயன் கிராம அலுவலர் கு.துஸ்யந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (121)



பனை அபிவிருத்திச் சபையின் புதிய தலைவராக பொறுப்பேற்றுக் கொண்ட பசுபதி சீவரத்தினத்தின் ஓராண்டு சேவையினைப் பாராட்டி பனை அபிவிருத்தி சபையின் பணியாளர் நலன்புரிச் சங்கத்தினால் விருது வழங்கிக் கௌரவிக்கப்படுவதைக் காணலாம்.

## மக்கள் வங்கிக்கு மனதார வாழ்த்து

**பொன் விழா 2011**



மக்கள் வங்கி வெற்றிகரமான அரை நூற்றாண்டுக் கால வங்கிச் சேவையினை நிறைவு செய்து பொன் விழாவினைப் பெருமையுடன் கொண்டாடுகிறது. இதனையொட்டி வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் நான் உவகையடைகின்றேன்.

மக்கள் வங்கியானது ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து, இன்றுவரை மக்கள் மனமறிந்த வங்கி என்ற ரீதியில் மக்களுடன் ஒன்றிணைந்த வங்கியாக, சமூகத்துடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டதாக இலங்கையின் ஒட்டுமொத்த குடித் தொகையினருக்குமான வங்கியாக சிறந்த சேவைகளை ஆற்றி வருகின்றது.

குறிப்பாக, நெருக்கடியான காலங்களில் தோளோடு தோள நின்று சிறப்பான சேவைகளை வழங்கி வந்துள்ள மக்கள் வங்கி, தனது ஆரம்பகால குறிக்கோள்களினின்றும் வழுவாது, கூட்டுறவு மற்றும் கிராமியப் பொருளாதார அபிவிருத்திக்கான தனது நிதியியல் பங்களிப்பினைத் தொடர்ந்தும் வழங்கி வருவது பாராட்டுக்குரியதாகும்.

எமது பகுதியைப் பொறுத்தவரையில் விவசாயம், சிறு தொழில், சுயதொழில், மீன்பிடி, சிறு கைத்தொழில் உள்ளிட்டவற்றுக்கான பல்வேறு கடன் திட்டங்களையும் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கான வீட்டுக்கடன் திட்டங்களையும் மக்கள் வங்கி வழங்கி வருகின்றது.

இது குறித்து நான் எமது மக்களின் சார்பாக மக்கள் வங்கிக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இத்தகைய பெருமை வாய்ந்த வங்கியியலில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள மக்கள் வங்கி, தொடர்ந்தும் பல நூற்றாண்டுகளுக்கு தனது சிறப்பான சேவைகளை எமது மக்களுக்காக வழங்க வேண்டுமெனவும், நிறைவான பொருளாதார அபிவிருத்தியுடன் கூடிய உன்னதமான வங்கிச் சேவையினைத் தொடர்ந்தும் வழங்க வேண்டுமெனவும், குறிப்பாக யுத்தம் மற்றும் பிற அனர்த்தங்கள் காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள எமது மக்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் எனவும் கூறி எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**டக்ளஸ் தேவானந்தா**
பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்
(C/794)

# சுன்னாகம் ஸ்கந்தவரோதய அணியை 42 ஓட்டங்களால் வென்றது ஸ்ரான்லி

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிக்கெதிரான போட்டியில் ஸ்ரான்லிக் கல்லூரி அணி 42 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இரு அணிகளுக்குமிடையிலான ஐம்பது ஓவர்கள் கொண்ட பயிற்சிப் போட்டி ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத் தில் நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்ரான்லிக் கல்லூரி அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. அந்த அணி 48 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 246 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மதன் 70 பந்துகளை எதிர்கொண்டு எட்டு பவுண்டரிகள் அடலங்லாக 76 ஓட்டங்களையும், பிரசாந்த் 35 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சிந்துஜன் மூன்று, சுஜிதரன், கானுஜன் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு ஆடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 43 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 202 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் கே. றொபேட் றிஷான் ஸ்கந்தவரோயதக் கல்லூரி அணியின் வெற்றிக்காக இறுதி வரை போராடியும் பலன் கிடைக்கவில்லை. அவர் 95 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக 88 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் நிரோஜன் 22 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் விதுஷன், மதன் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (44)


# ஜொலிஸ்ரார், பல்கலை அணிகள் புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை

(யாழ்ப்பாணம்)

யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் நடாத்தும் யாழ். நகரில் சிறந்த அணிகள் தெரிவில் ஜொலிஸ்ரார், பல்கலைக்கழக அணிகள் 25 புள்ளிகளைப் பெற்று முன்னிலையில் உள்ளன.


கே.சி.சி.சி அணி 19 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்திலும், கிளாஸ் கொப்பர்ஸ் அணி 16 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும், சென்ற லைட்ஸ், பற்றீசியன்ஸ் அணிகள் தலா 15 புள்ளிகளைப் பெற்று நான்காமிடத்தையும், சிறிகாமாட்சி அணி 13 புள்ளிகளைப் பெற்று ஐந்தாம் இடத்தையும், யாழ். ஜொனியன்ஸ் அணி 11 புள்ளிகளைப் பெற்று ஏழாமிடத்திலும் மானிப்பாய் பரீஸ், திருநெல்வேலி கிறிக்கெற் அணி தலா 5 புள்ளிகளைப் பெற்று எட்டாம் இடத்திலும், அரியாலை சென்றல், நியூஸ்ரார், ஸ்ரான்லி அணிகள் தலா மூன்று புள்ளிகளைப் பெற்று ஒன்பதாவது இடத்திலும் உள்ளன.

இத் தெரிவில் ஆகக்குடிய புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தை பெறும் அணிக்கு ஜோர்ஜ் லெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணமும், 10,000 ரூபா பணப் பரிசும் வழங்கப்படும். அத்துடன் இத்தெரிவில் புள்ளிகள் அடிப்படையில் முதல் மூன்று அணிகளும் 2012 ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறவிருக்கும் முக்கோணச் சுற்றுப் போட்டிக்குத் தகுதி பெறும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.



கச்சாய் அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் வெற்றிபெற்ற வீரர்களுக்கான வெற்றிக்கிண்ணத்தை தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் வழங்குவதையும், அருகில் அதிபர் க. மங்களேஸ்வரன் நிற்பதையும் காணலாம். (11)

# ஏழாம் திகதி ஆரம்பமாகின்றது முக்கோண வெற்றிக் கிண்ணம்



ஜெயருபன் மணிவண்ணன் விமலகாந்த்

(யாழ்ப்பாணம்)

யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் நடாத்தும் முக்கோண வெற்றிக்கிண்ணம் அடுத்த மாதம் 7ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதென சென்றல் கழகத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளில் போட்டிகள் நடைபெறும் என்றும், ஜோர்ஸ் வெஸ்ரர் வெற்றிக் கிண்ணத்திற்காக எமது கழகத்தால் நடாத்தப்படும் சிறந்த அணிகள் தெரிவு முதல் மூன்று இடங்களைப் பெற்றுக் கொள்ளும் அணிகளே இத்தொடரில் பங்குபற்ற முடியும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

அந்த அடிப்படையில் கடந்த 2010ஆம் ஆண்டு தரப்படுத்தலில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற அணிகளே இத்தொடரில் ஆடவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இப்போட்டி குறித்து சென்றல் கழகத்தால் விடுக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் வருமாறு: ஜோர்ஜ் வெப்ஸ்ர வெற்றிக்கிண்ணத்திற்காக யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்திய யாழ். நகரின் சிறந்த அணியைத் தெரிவு செய்யும் நிகழ்வில் புள்ளிகள் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அணிகள் பங்குபற்றுவதற்கு தகுதி உடையன.

தெரிவு செய்யப்பட்ட அணி ஏதேனும் ஒரு அணி மறுக்கும் பட்சத்தில் புள்ளிகள் அடிப்படையில் உள்ள நான்காவது அணி பங்குபற்ற தகுதியுடைதாக அனுமதிக்கப்படும். நான்காவது இடத்தில் சம புள்ளிகளைப் பெற்று ஒன்றுக்கு மேற்பட்ட அணிகள் இருப்பின், ஐம்பது ஓவர்கள் கொண்ட போட்டிகளில் கூடிய வெற்றிகளைப் பெற்றுக் கொண்ட அணி தகுதி பெறும்.

போட்டியில் கலந்து கொள்வதற்கு சம்மதம் வழங்கிய பின் போட்டியில் கலந்து கொள்ளாது (Walk over) தவறும் பட்த்தில் அடுத்த வருடம் புள்ளிகள் அடிப்படையில் தகுதி பெற்றிருந்தாலும் தொடரில் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்பட மாட்டதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ். சென்றல், ஜொலிஸ்ரார், பல்கலைக் கழக ஆகிய மூன்று அணிகள் மோதுகின்றன.

பல்கலை அணிக்கு ஜெயருபனும், ஜொலிஸ்ரார் அணிக்கு வி. மணிவண்ணனும், சென்றல் அணிக்கு எஸ். விமலகாந்தும் அணித் தலைவர்களாகக் கடமையாற்றுகின்றனர்.

# சமனிலையில் நிறைவு பெற்ற பொலிவிய, ஆர்ஜென்டினா ஆட்டம்

43ஆவது கோபா அமெரிக்க கோப்பைக்கான லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு இடையிலான முதல் கால்பந்து போட்டியில் பொலிவியாவுடன் ஆர்ஜென்டினா அணி 1- 1 என்ற கோல் கணக்கில் சமன் செய்தது. பியூனஸ் ஐரஸுக்கு வெளியே லா பிளாட்டாவில் நடைபெற்ற இந்தப் போட்டியில் பலமான ஆர்ஜென்டினா அணி மெஸ்ஸி, டாவேஸ் ஆகியோருடன் களமிறங்கினாலும் வெற்றி பெற முடியாமல் போனது ரசிகர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இடைவேளை வரை இரு அணிகளும் கோல் அடிக்காத நிலையில் இடைவேளைக்குப் பிறகு 2ஆவது நிமிடத்தில் பொலிவியா அணியின் எடிவால்டோ ரோஜஸ் முதல் கோலை அடித்து அதிர்ச்சி அளித்தார். இரண்டாவது பாதியில் பதிலி வீரராகக் களமிறங்கிய டீகோ மரடோனாவின் மருமகன் செர்ஜியோ அகுயெரோ ஆர்ஜென்டினா அணிக்கு கோலை அடித்து சமன் செய்தார். இன்று வெனிசுலா அணிக்கு எதிராக பிரேசில் தனது முதல் ஆட்டத்தை விளையாடுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# நிறைய ஏற்ற இறக்கங்களை சந்தித்துவிட்டாராம் இஷாந்த்

எனது 5 ஆண்டு கால கிரிக்கெட் வாழ்க்கையில் நிறைய ஏற்ற இறக்கங்களை கண்டு இருக்கிறேன். ஆனால் எப்போதும் வீழ்ச்சியடையும் போது யாரும் கண்டுகொள்ள மாட்டார்கள். இந்தச் சமயத்தில் நான் சகீர்கானுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அவர் தான் உடல்தகுதி விடயத்தில் எப்போதும் கவனம் அவசியம் என்று வலியுறுத்துவார்.

தொடக்கத்தில் நான் இதனைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் ஒரு வேகப்பந்து வீச்சாளருக்கு உடல்தகுதி எவ்வளவு முக்கியம் என்பதை இப்போது உணர்ந்து இருக்கிறேன். இவ்வாறு இஷாந் சர்மா தெரிவித்தார்.

வேறு ஒருவரை காப்பியடித்து அவரை போன்று பந்து வீச முயன்றேன். இதனால் எனது வேகமும், எனது இயல்பான பந்து வீச்சும் பாதிக்கப்பட்டது. ஆனால் இப்போது எது எனது பலம் என்பதை புரிந்து கொண்டு இருக்கிறேன். டெஸ்ட் கிரிக்கெட்டில் பொறுமை மிகவும் அவசியம்.

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இருந்து தான் உடல் ஏன் களைப்படைகிறது, எப்படி மீண்டு வருகிறது என்பதைத் தெரிந்து கொண்டேன். நிறையப் போட்டிகளில் விளையாடும் போது, அதிகமாக பயணம் மேற்கொள்ளும் போதும் உடல்ரீதியாக தயாராக இருக்க எப்படி பயிற்சி மேற்கொள்ள வேண்டும், எப்படி சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும் என்பதையும் அறிந்தேன்.

வேகமாகவும், எகிறி செல்லும் வகையில் பவுன்சராக பந்து வீசுவதும்தான் எனது பந்து வீச்சின் பலமாகும். சிறப்பாக ஹஸ்விங் செய்தால் கூட வேகத்தையும், பவுன்ஸ் செய்வதையும் இழக்க விரும்பவில்லை. எனது டெஸ்ட் கிரிக்கெட் வாழ்க்கையை தொடங்கிய போது இவ்வளவு சீக்கிரம் 100 விக்கெட்டுகளை வீழ்த்துவேன் என்று எதிர்பார்க்கவே இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இதன் மூலம் அணியில் தொடர்ந்தும் இடம்கிடைத்துவிட்டதாக நான் நினைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மேற்கிந்தியத்தீவு அணியுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் இனிங்சில் ஆறு விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய இசாந் சர்மா டெஸ்ட் கிரிக்கெட்டில் இளவயதில் 100 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய வீரர் என்ற சாதனை எட்டியமை குறிப்பிடத்தக்கது.


# மேற்கிந்திய கிரிக்கெட் சபைக்காக தொடர்ந்தும் காத்திருக்க முடியாது

## குமுறுகிறார் கிறிஸ் கெய்ல்

மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் சபைக்காகவும், அதன் தலைவருக்காகவும் நான் தொடர்ந்தும் காத்திருக்க முடியாதென கிறிஸ் கெயல் தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியத்தீவு அணியில் சமீப காலமாக கெய்ல் சேர்க்கப்படவில்லை. இது அவருக்கு மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்தியது. மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் சபைக்கும், அதன் தலைவர் எமஸ்ட் ஹிலாயருக்கும் இடையே கெய்லுக்கு கடுமையான கருத்து வேறுபாடு உள்ளது. இதனால் அவர் தேசிய அணியில் சேர்க்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டுள்ளார்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் கெய்ல் அளித்த வானொலி பேட்டியில், கிரிக்கெட் சபை மீது அதிருப்தி தெரிவித்திருந்தார். அதனால் அவர் தொடர்ந்து புறக் கணிக்கப்படுகிறார். மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் சபையின் நிர்வாகிகள் சமீபத்தில் கூடி கெயிலின் எதிர்காலம் குறித்து விவாதித்தனர்.




இருப்பினும், தான் இருட்டிலேயே அடைக்கப்பட்டுள்ளதாக கெய்ல் குமுறுகிறார். எனது கண்கள் திறந்துள்ளன. எனது இதயம் தூய்மையாக உள்ளது.

மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் சபைக்காகவும் அதன் தலைவர் எமஸ்ட் ஹிலாய்ருக்கும் நான் காத்திருக்க முடியாது என கெய்ல் ஆவேசமாகத் தெரிவித்தார்.

# அம்பாந்தோட்டை போட்டி ஏற்பாடுகள் திருப்தி என்கிறார் லூயிஸ் மார்ட்டின்



(கொழும்பு)

2018ஆம் ஆண்டு அம்பாந்தோட்டையில் பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டியை நடத்துவதற்கு முன்னெடுக்கப்பட்டிருக்கும் ஏற்பாடுகள் தம்மை வெகுவாகக் கவர்ந்திருப்பதாக இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகள் தொடர்பான அனுமானிப்புக் குழுவின் தலைவர் லூயிஸ் மார்ட்டின் தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகள் தொடர்பான அனுமானிப்புக் குழுவினர் நான்கு நாட்கள் இலங்கையில் தங்கியிருந்து அம்பாந்தோட்டையில் பொதுநலவாய போட்டிகளை நடத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் ஏற்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்திருந்தனர்.

ஒவ்வொரு இடத்திற்கும் இக்குழுவினர் நேரடியாக விஜயம் செய்து அங்கு செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகள் குறித்து பரிசீலனை நடத்தியிருந்தனர். இந்த ஒழுங்குகள் தம்மை வெகுவாகக் கவர்ந்திருப்பதாக அனுமானிப்புக் குழுவின் தலைவர் லூயிஸ் மார்ட்டின் நாடு திரும்ப முன்னர் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் குறிப்பிட்டார்.

நாடு எதிர்பார்த்திருக்கும் பாரிய நிகழ்வுக்குத் தேவையான வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பது புலனாகிறது. போட்டிகளை நடத்துவதற்குத் தேவையான வசதிகளை நோக்கி அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏற்பாட்டுக் குழு சிறப்பாகச் செயற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தாம் இலங்கையில் மேற்கொண்ட ஆய்வுகளை உள்ளடக்கிய ஆய்வறிக்கை பொதுநலவாய போட்டிகளின் பொதுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும். இறுதித் தீர்மானத்தை அவர்களே மேற்கொள்வார்கள். பொதுநலவாய் விளையாட்டுப் போட்டி விடயத்தில் உள்ளூர் அரசியல் எடுபடாது என்றும் லுயிஸ் மார்ட்டின் ஊடகவியலாளர் மாநாட்டில் குறிப்பிட்டார். ஆய்வுகளை மேற்கொண்ட போது ஏற்பாட்டுக் குழு வழங்கிய உதவிகளுக்கும் அவர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

## தாய்லாந்து கரப்பந்து பயிற்சி; இலங்கை வீரர்களும் தெரிவு

**(கொழும்பு)**

**தாய்லாந்து பாங்கொக் நகரில் நடைபெறவுள்ள சர்வதேச கரப்பந்து பயிற்சி போட்டிகளுக்கான மூன்றாவது பாடநெறியில் கலந்து கொள்வதற்காக இலங்கையைச் சேர்ந்த லெப். கேணல் மகேஷ் அபேரத்ன , ஷன்ன ஜயசேகர மற்றும் தீபால் சில்வா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.**

**சர்வதேச கரப்பந்து சம்மேளனத்தினால் இப்பாடநெறிகள் நேற்று முன்தினம் முதல் 9ஆம் திகதி வரை தாய்லாந்து பாங்கொக்கில் நடைபெறுகிறது. சர்வதேச கரப்பந்து பயிற்சி போட்டிகளுக்கான மூன்றாவது பாடநெறியை பூர்த்தி செய்தமை குறிப்பிடத்தக்கது.**

## ஊக்க மருந்தை பயன்படுத்தவில்லை

### கண்ணீருடன் கூறுகிறார் மந்தீப் கவுர்



(புதுடில்லி)

தான் ஒரு போதும் ஊக்கமருந்தை பயன்படுத்தியதில்லை என்று இந்திய தடகள வீராங்கனை மந்தீப் கவுர் கண்ணீர் மல்கக் கூறினார்.

ஆசிய விளையாட்டுக்கு பின்னர், உலக ஊக்கமருந்து தடுப்பு கழகத்தின் பரிசோதனைப் பட்டியலில் எனது பெயரும் பதிவாகி விட்டது. அப்படி இருக்கும் போது எனது செயல் திறனை அதிகரிக்க ஊக்கமருந்தை எடுத்துக் கொள்ள நான் ஒன்றும் பைத்தியக்காரி கிடையாது. ஊக்க மருந்தைப் பயன்படுத்தும் போது அதன் தாக்கம் உடலில் குறைந்த பட்சம் 3 மாதங்கள் இருக்கும். இதனைத் தெரிந்தும் சர்வதேச போட்டியில் பங்கேற்கும் ஒரு வீரர் ஊக்கமருந்தை எப்படி உட்கொள்வார்?

கடந்த 6-7 ஆண்டுகளாக நான் சர்வதேச அளவில் ஓட்டப்பந்தயத்தில் பங்கேற்று வருகிறேன். எனது வாழ்க்கையில் நான் ஒரு போதும் தடை செய்யப்பட்ட ஊக்கமருந்தை உட்கொண்டது கிடையாது. தற்போது இது முதல் முறையாக நடந்துள்ளது. நான் ஒரு அப்பாவி. நிச்சயம் இந்த பிரச்சினையில் இருந்து விடுபடுவேன். அதன் பிறகு மீண்டும் தடகளத்தில் பங்கேற்க வாய்ப்பு கிடைக்கும் என்று நம்புகிறேன்.

இதற்கு முன்பு பல முறை எனக்கு ஊக்கமருந்து சோதனை நடந்துள்ளது. அப்போது எந்த பிரச்சினையும் எழவில்லை. அது போல் இப்போதும் சுத்தமானவள் என்பதை நிருபிப்பேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இந்திய-மேற்கிந்திய முதல் டெஸ்ட்; தவறிழைத்து விட்டாராம் ஹார்ப்பர்

இந்திய - மேற்கிந்திய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின்போது, தான் தவறிழைத்துவிட்டதாக அவுஸ்ரேலிய நடுவர் டரல் ஹார்ப்பர் ஒப்புக்கொண்டுள்ளார்.

அதேவேளை, இந்திய வீரர்களும் கிரிக்கெட் உணர்வோடு செயற்படவில்லை எனவும் கிரிக்கெட் விதிகளை அவர்களுக்கு, தான் பிரயோகித்திருக்கக்கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது இவ்வருடத்தில் எனது மிகச்சிறந்த போட்டி இல்லைதான். ஒவ்வொரு பந்துவீச்சையும் அவதானித்த போட்டி மத்தியஸ்தர் ஜெவ் குரோவ் எனது தீர்ப்புகள் 94 சதவீதம் சரியானவை எனக் கூறினார்.

ஹர்பஜனுக்கு எதிராக எல்.பி.டபிள்யூ ஒன்று கொடுக்கப்பட்டது. தீர்ப்பு மீளாய்வு முறைமை அமுலில் இருந்திருந்தால் அத்தீர்ப்பு மாற்றப் பட்டிருக்கலாம். அத்துடன் மேற்கிந்திய வீர் பிசோ நோபோல் ஒன்றை வீசுவதையும் கண் டறியத் தவறிவிட்டேன். அதெல்லாம் இந்தியர் கள் மாட்டிறைச்சி பர்கர் உண்பதுபோன்ற விச யங்கள். (அரிதானவை) என்றார்..

இந்திய வீரர்களின் செயற் பாடு குறித்து மேற் கிந்திய வீரர்கள் மகிழ்ச்சிய டையவில்லை யெனக் கூறிய நடுவர் ஹார்பர், இந்திய வீரர்களுக்கு நான் கிரிக்கெட் விதிகளை பிர யோகித்திருக்கக்கூடாது என வும் விரக்தியாகத் தெரிவித் துள்ளார்.

மூன்றாவது டெஸ்ட் போட் டிக்கான நடுவர் குழுவிலிருந்து ஹார்ப்பர் நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அதிவேக ஓட்டச்சாதனை முறியடிக்கப்பட்டது

லாசேனில் நேற்று முன்தினம் நடைபெற்ற டைமண்ட் லீக் தடகளப் போட்டிகளில் ஜமைக்காவின் அசஃபா போவெல் 100 மீற்றர் ஓட்டத்தில் 9.78 வினாடிகளில் இலக்கைக் கடந்து இந்த ஆண்டின் அதிவேக 100 மீற்றர் ஓட்டச் சாதனையை நிகழ்த்தினார்.

இந்தப் போட்டிகளில் அதிவேக மன்னன் உசைன் போல்ட், டைசன் கே ஆகியோர் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இரண்டாவது இடத்திற்கு வந்த மற்றொரு ஜமைக்கா வீரர் மைக்கேல் ஃபிரேட்டர் 9.88 வினாடிகளில் இலக்கை எட்டினார்.

3ஆவது இடத்திற்கு ஐரோப்பிய சம்பியனான கிறிஸ்டோப் லெமாய்டர் வந்தார். போவெலின் இந்தச் சாதனை 2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் உள்ள நிலையில் உசைன் போல்ட்டிற்கு விடுக்கப்பட்ட ஒரு சவாலாகவே பார்க்கப்படுகிறது.



## ஒற்றையர் இறுதிப் போட்டியில் நடால் - ஜோகோவிச் மோதல்

(லண்டன்)

விம்பிள்டன் டென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டிக்கு ஸ்பெயினின் ரபெல் நடால், செர்பியாவின் நோவக் ஜோகோவிச் முன்னேறினர்.

லண்டனில், 125ஆவது விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் தொடர் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் அரையிறுதியில் செர்பியாவின் நோவக் டோகோவிச், பிரான்சின் ஜோ-வில்பிரிட் டோங்காவை சந்தித்தார். இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜோகோவிச் 7-6, 6-2, 6-7, 6-3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று முதன் முறையாக விம்பிள்டன் பைனலுக்கு முன்னேறினார்.

ஆண்கள் ஒற்றையர் அரையிறுதியில் ஸ்பெயினின் ரபெல் நடால் 5-7, 6-2, 6-2, 6-4 என்ற செட் கணக்கில் இங்கிலாந்தின் ஆன்டி முர்ரேவை வீழ்த்தி, இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

இதேவேளை, மகளிர் இரட்டையர் அரையிறுதிப் போட்டியில் இந்தியாவின் சானியா மிர்ஸா ரஷ்யாவின் எலியான வெஸ்னியா ஜோடி தோல்வியுற்றது.

மகளிர் இரட்டையர் அரையிறுதிப் போட்டியில் செக் குடியரசின் க்வேட்டா பெஸ்ச்கே மற்றும் ஸ்லோனியாவின் கத்தரினா ஸ்ரேபோட்னிக் ஆகியோர் சானியா- வெஸ்னியாவை 6-3 6-1 விகிதத்தில் தோற்கடித்தனர்.

ஆரம்பம் முதல் இப்போட்டியில் பெஸ்ச்கே- கத்தரினா ஜோடி ஆதிக்கம் செலுத்தியது. இதனால் சானியா ஜோடி தோல்வியைத் தழுவிக் கொண்டது.

சானியா - வெஸ்னியா ஜோடி கடந்த மாதம் பிரெஞ்சு பகிரங்த் தொடரில் இறுதிப்போட்டி வரை முன்னேறியமை குறிப்பிடத்தக்கது.

## கனவு நனவானதில் திருப்தியடைகிறார்

(லண்டன்)

விம்பிள்டன் ரென்னில் இறுதிப் போட்டியில் விளையாட வேண்டும் என்பது எனது கனவு. அது நனவாகி இருப்பது மகிழ்ச்சி. இறுதிப் போட்டியில் விளையாடும்போது மிகச் சிறந்த உணர்வை அது தரும் என உணர்கின்றேன் என் ஜோகோவிச் தெரிவித்தார்.

4 வயதில் இருந்து ரென்னிஸ் விளையாடி வருகிறேன். அது முதல் விம்பிள்டன் இறுதிப் போட்டியில் விளையாட வேண்டும் என்பது எனது கனவாகும். அது இப்போது நிறைவேறி இருக்கிறது. இறுதிப்போட்டியில் விளையாடும் போது, அது மிகச்சிறந்த உணர்வைத் தரும் என்று நினைக்கிறேன். இன்றைய இறுதிப் போட்டி சவால் நிறைந்தது எனவும் அவர் தெரிவித்தார்.

# சுத்திகரிக்கப்படாத பெற்றோல் விநியோகம்; மூடிமறைப்பதற்கு அரசாங்கம் முயற்சி

## குற்றஞ்சாட்டுகிறது ஜே.வி.பி.



(கொழும்பு)

இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோல் 20 ஆயிரம் மெற்றிக் தொன் இரசாயன பரிசோதனை இன்றியே சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவிக்கின்றது.

இதன் காரணமாக மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டி உள்ளிட்டவற்றிற்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் கூறியதாவது,

சுத்திகரிக்கப்பட்டு பரிசோதனையின் பின்னரே பெற்றோலை சந்தைக்கு விநியோகிப்பதா இல்லையா என தீர்மானிக்க வேண்டும். ஆனால் நான் மிகவும் பொறுப்புடன் கூறுகிறேன். இந்த 20 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோல் சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதற்கு முன்னரே விநியோகிக்கப்பட்டது.

இதன்படி குறித்த இடங்களை மீண்டும் சோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

# தரமற்ற எரிபொருள் விநியோகம்; உரியவர்களுக்கு தண்டனை வழங்கவேண்டும்

## என்கிறது ஐ.தே.க.

(கொழும்பு)

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் விநியோகிக்கப்பட்ட பெற்றோல் தொடர்பில் தோன்றியுள்ள பிரச்சினைகள் குறித்து மக்களைத் திசைதிருப்பும் கருத்துக்களைக் கூறாது உடனடியாக விசாரணை நடத்தி பொறுப்புக் கூறவேண்டியவர்களுக்கு தண்டனை வழங்குமாறு அரசாங்கத்திடம் ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

விலைமனு கோரல் நடைமுறைக்கு புறம்பாக எரிபொருள் கொண்டுவரப்பட்டதன் காரணமாக இந்தப் பாரதூரமான நிலைமை தோன்றியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குறிப்பிடுகின்றது.

இந்த விடயம் குறித்து பெற்றோலிய தொழிற்துறை அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோர் எந்தவிதமான கருத்துக்களை வெளியிட்ட போதிலும், வாடிக்கையாளர்களும் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களும் கடும் பாதிப்பினை எதிர்நோக்கியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உரிய நடைமுறைகளைப் பின்பற்றாது தரத்தில் குறைந்த பெற்றோல் இறக்குமதி செய்யப்பட்டிருப்பின் பொறுப்புக் கூற வேண்டியவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதாக அறிக்கையொன்றின் மூலம் பெற்றோலிய தொழிற்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறியுள்ளார்.

எனினும் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள இரசாயன ஆய்வுகூட பரிசோதனைகளின் பிரகாரம் தருவிக்கப்பட்டுள்ள பெற்றோல் உரிய தரத்தினைக் கொண்டதாகும் என்று அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு உட்கட்சி மோதல் தீவிரம்

(கொழும்பு)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபை தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது ஒரே வேட்பாளர்களிடையே மோதல்கள் உக்கிரமடைந்துள்ளதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

கொழும்பு, கண்டி, பொலன்னறுவை, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் இந்த மோதல் சம்பவங்கள் அதிகமாகக் காணப்படுவதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தேர்தல் சட்டங்களை மீறிய 14 முறைப்பாடுகள் இதுவரை பதிவாகியுள்ளதாக தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையத்தின் அமைப்பாளர் ரசாங்க ஹரிஸ்சந்திர தெரிவித்தார்.

# போலியான பட்டச்சான்றிதழை சமர்ப்பித்து பாதுகாப்பு பல்கலையில் ஊடுருவியவர் கைது

(கொழும்பு)

வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் போலியான பட்டச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்து சிறிலங்காவின் மிக முக்கியமான பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தினுள் விரிவுரையாளராக ஊடுருவிய ஒருவரை குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இரத்மலான - கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் இவர் போலிச்சான்றிழ்கள் மூலம் விரிவுரையாளர் பதவியைப் பெற்றுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வுப் பிரிவு காவல் துறையினர் இவரை நேற்றுமுன்தினம் மொறட்டுவ நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தினர்.

இந்தியாவின் இந்திராகாந்தி பல்கலைக்கழகம் மற்றும் பிரித்தானிய, அமெரிக்கப் பல்கலைக்கழகங்களின் போலிப் பட்டச்சான்றிதழ்களைச் சமர்ப்பித்தே இவர் விரிவுரையாளராகப் பணியில் சேர்ந்துள்ளார்.

இவரது பட்டச்சான்றிதழ்களை ஆய்வு செய்த போதே அவை போலியானவை என்று தெரியவந்தது.

இவரது போலிச்சான்றிதழ்கள் அனைத்துலக காவல்துறைக்கு விசாரணைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத்துறை அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இதையடுத்து அவரை எதிர்வரும் 12ஆம் திகதி வரை தடுப்புக்காவலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மிகமுக்கிமான பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தினுள் போலிப்பட்டச் சான்றிதழ் மூலம் ஒருவர் விரிவுரையாளர் பதவியைப் பெற்று ஊடுருவியது இலங்கை பாதுகாப்புக் கட்டமைப்புகளில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நபர் யார், இவரது பின்னணி என்ன என்பது குறித்து தனியான விசாரணைகளை மேற்க்கொள்ளுமாறு இலங்கையின் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# எரிபொருட்களின் விலைகளை குறைக்க முடியாதென அறிவிப்பு

(கொழும்பு)

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை பீப்பாய்க்கு 20 அமெரிக்க டொலர்களால் குறைவடைந்துள்ள போதிலும், உள்ளூரில் எரிபொருட்களின் விலை குறைக்கப்பட மாட்டாது என பெற்றோலியத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த மே மாதம் 111.50 டொலர்களுக்கு இறக்குமதி செய்யப்பட்ட ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் ஜூன் 23 ஆம் திகதி 90.70 டொலர்களாக குறைவடைந்தது. ஆனால் எரிபொருள் விற்பனையில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தொடர்ச்சியாக நஷ்டத்தை எதிர்கொண்டு வந்ததால், உலக சந்தையில் எரிபொருள் விலை குறைந்ததன் நன்மையை பாவனையாளர்களுக்கு வழங்க முடியாதுள்ளதாக பெற்றோலியத்துறை அமைச்சின் செயலாளர் டைட்டஸ் ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

"ஒரு லீற்றர் டீசலுக்கு 33 ரூபாவும் ஒரு லீற்றர் பெற்றோலுக்கு 3ரூபாவையும் நாம் எதிர்கொள்கிறோம். ஒரு லீற்றர் மண்ணெண்ணெய்க்கு 31 ரூபா நஷ்டத்தை எதிர்கொள்கிறோம். இந்நிலையில் எரிபொருட்களின் விலைகளைக் குறைப்பது கூட்டுத்தாபனத்திலுள்ள நெருக்கடிகளை மேலும் மோசமாக்கும்" என அவர் தெரிவித்துள்ளார்.

# அச்சுறுத்தலுக்குள்ளான ஊழியர்களுக்கு பாதுகாப்பு வழங்கக் கோரி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

உயிரச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ள சுதந்திர வர்த்தக வலய ஊழியர்களுக்குப் போதுமான பாதுகாப்பை வழங்குமாறு கோரி அரசியல்கட்சிகளின் கூட்டு ஆர்ப்பாட்டமொன்று நடைபெறவுள்ளது தனியார் ஓய்வூதியச் சட்டத்திற்கு எதிராக அண்மையில் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களின் பின்னணியில் செயற்பட்ட முக்கியஸ்தர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் சுமார் ஐநூறு வரையான ஊழியர்கள் தற்போது உயிரச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளனர்.

அதன் காரணமாக அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து எழுத்து வடிவ ஆவணமொன்றில் கையொப்பமிட்டு, தங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரி முறைப்பாடொன்றைச் செய்துள்ளனர்.

எனவே அவர்களைப் பாதுகாக்கும் விடயத்தில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவைத் தலையிடக் கோரும் விசேட மகஜர் ஒன்றை அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பு மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கையளித்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி, புதிய இடதுசாரி முன்னணி, ஐக்கிய சோசலிஷ முன்னணி ஆகிய கட்சிகளும் சுதந்திரத்திற்கான மேடை அமைப்பும் ஒன்றிணைந்தே பிரஸ்தாப அரசியல் கட்சிக் கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சூழலை அசுத்தமாக வைத்திருந்த 2900 பேருக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தினை முன்னிட்டு நுளம்பு பெருகும் வகையில் சூழலை வைத்திருந்த இரண்டாயிரத்து 900 பேருக்கு எதிராக வழக்குத் தொடரப் பட்டுள்ளது.

நுளம்பு பெருகும் வகையில் சூழலை வைத்திருந்தோரிடம் இருந்து 21 இலட்சம் ரூபா அபராதம் அறவிடப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிடுகின்றது.

சுகாதார அமைச்சு மற்றும் ஜனாதிபதி தேசிய டெங்கு ஒழிப்பு செயலணி ஆகியவற்றினால் கடந்த 20 ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனம் செய்யப்பட்டிருந்தது.

அந்தக் காலப்பகுதிக்குள் நுளம்பு பரவும் அபாயம் நிலவுகின்ற ஒரு இலட்சத்து 21 ஆயிரத்து 640 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

மேலும் இரண்டு இலட்சத்து 58 ஆயிரத்து 268 பேருக்கு தமது சூழலை எதிர்வரும் இரு வாரங்களுக்குள் துப்புரவு செய்யுமாறு அறிவுறுத்தல் விடுக்கப் பட்டுள்ளது.

# மருத்துவ அருங்காட்சியகம் அமைப்பதற்கு நடவடிக்கை

(கொழும்பு)



இலங்கையில் முதன் முதலாக மருத்துவ அருங்காட்சியகம் ஒன்றை அமைக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

111 வருடம் பழைமை வாய்ந்த கட்டடத்தில் இந்த அருங்காட்சியகம் அமைக்கப் படவுள்ளதாக அதன் பணிப்பாளர் சுனில் சமரநாயக்க தெரிவித்தார்.

இந்த அருங்காட்சியகத்தில் புராதன சத்திர சிகிச்கை உபகரணங்கள், புகைப் படங்கள் மற்றும் கிடைத்தற்கரிய மருத்துவ உபகரணங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

மேலும் இந்த மருத்துவ அருங்காட்சியகம் அமையவுள்ள கட்டடத்தை மருத்துவ ஆய்வுக்கு அன்பளிப்புச் செய்த டி சொய்கா குடும்பத்தினரின் படங்களும் வைக்கப்படவுள்ளன.

# மேற்கின் முட்டாள்தனமான கொள்கைகளை பின்பற்றக் கூடாது என்கிறார் அமுனுகம



(கொழும்பு)

மேற்குலகின் முட்டாள் தனமான பொருளாதாரக் கொள்கைகளை இலங்கை பின்பற்றக் கூடாதென சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரான கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கொழும்பு திட்டத்தின் 60 ஆவது வருட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேற்குலகின் பொருளாதாரத் திட்டங்கள் இலங்கைக்கு பொருத்தமானவை அல்ல என்பதுடன், எமது கொள்கைத் திட்டங்களில் சில, சர்வதேச நாணய நிதியத்தின் திட்டங்களை விடவும் சிறந்தவையாகும்.

ஆசிய பசுபிக் பிராந்தியத்திலுள்ள இந்தியா,சீனா போன்ற நாடுகள், மேற்கின் பல திட்டங்களை விடவும், முன்னேற்றமான பாய்ச்சல்களையும்,சவால்களையும் முன்கொண்டு தமது பொருளாதாரத்தை வளர்ச்சியடையச் செய்கின்றன.

இவ்வாறான ஸ்திரத்தன்மையுடைய கொள்கைகளின் மூலமே புதிய வகையிலான பொருளாதார அபிவிருத்திகளை நாம் அடைந்து கொள்ள முடியுமெனவும் அவர் கூறினார்.

## மேலும் ஐநூறுபேர் நாளை விடுவிப்பு

(கொழும்பு)

இறுதிகட்ட யுத்தத்தின் போது படையினரிடம் சரணடைந்து, தற்போது நலன்புரி நிலையங்களில் புனர்வாழ்வு பெற்றுவரும் முன்னாள் புலி உறுப்பினர்களில் மேலும் ஐநூறுபேர் நாளைய தினம் சமூகத்துடன் இணைக்கப் படவுள்ளனர்.

வவுனியா கலாசார மத்திய நிலையத்தில் வைத்து இவர்கள் சமூகத்துடன் இணைக்கப்படவுள்ளதாகவும், இந்த நிகழ்வில் சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## சம்பளப் பிரச்சினையை தீர்ப்பது குறித்து விரிவுரையாளர்கள் அடுத்தவாரம் பேச்சு

(கொழும்பு)

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்பளப் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக அரச அதிகாரிகளுக்கும், விரிவுரையாளருக்குமிடையே அடுத்த வாரம் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது.

விரிவுரையாளர்களால் முன்வைக்கப்பட்ட மாற்று ஆலோசனைகள் தொடர்பாக கலந்துரையாடி, அவர்களின் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் வகையிலேயே இந்தப் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தமது சம்பளக் கோரிக்கை தொடர்பாக பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனம் (Futa) பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் உயர்கல்வி அமைச்சின் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

இவர்களுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் சாதகமாக அமைந்ததாகவும், சம்பளப் பிரச்சினைகள் தொடர்பாக உள்ள சர்ச்சைகள் அடுத்துவரும் பேச்சுவார்த்தையில் தீர்மானிக் கப்படுமெனவும் அவ்வாறு நடைபெற்றால் தமது தொழிற்சங்க நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ளத் தயாரெனவும், பல்கலைக்கழக ஆசிரிய சங்க சம்மேளனத் தலைவர் கலாநிதி நிர்மர் ரஞ்சித் தேவசிறி தெரிவித்தார்.

## கிளிநொச்சி மாவட்ட செயற்திட்டங்கள்; கட்டளைத் தளபதிக்கு விளக்கமளிப்பு

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் மீள்குடியேறியுள்ள நிலையில் அந்த மாவட்டத்தில் எதிர்காலத்தில் தம்மால் முன்னெடுக்கப்படவுள்ள செயற்திட்டங்கள் குறித்து ஆராயும்வகையில் ஐ.நாவின் பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள், கிளிநொச்சி படை அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

கடந்த புதன்கிழமை கிளிநொச்சியில் அமைந்துள்ள படைத் தலைமையகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் யு.என்.எச்.சி.ஆர் உலக உணவு ஸ்தாபனம்,ஐ.ஓ.எம்., யு.என்.டி.பி, யுனிசெவ், யுனெப்ஸ் ஆகியவற்றின் பிரதிநிதிகள், மாவட்டத்தில் எதிர்காலத்தில் தம்மால் மேற்கொள்ளவுள்ள செயற்திட்டங்கள் குறித்து மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் நந்தன் உடவத்தவிற்கு விளக்கமளித்தனர்.

தாம் செயற்படுத்தவிருக்கும் திட்டங்கள் தொடர்பிலும் அவை எந்தப் பகுதிகளில் அமுல்படுத்தப்படவுள்ளன என்பதையும் எடுத்துக் கூறினர்.

இந்தச் சந்திப்பின் போது மீள்குடியேற்றம் மற்றும் பின் தங்கிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு இந்த நிறுவனங்கள் செயற்படுத்தவுள்ள வேலைத் திட்டங்களைப் பாராட்டிய கட்டளைத் தளபதி, இதற்கு தமது முழுமையான உதவியை வழங்குவதாகவும் தெரிவித்தார்.

# உயிருக்கான இழப்பீட்டை வழங்கி ரிஸானாவை விடுவிக்கமுடியும்

### ஆசிய மனித உரிமை ஆணைக்குழு கூறுகிறது

(கொழும்பு)

சவூதி அரேபிய சட்டத்தின் படி உயிருக்கான இழப்பீட்டினை வழங்கி ரிஸானா நபீக்கினை விடுதலை செய்யவதற்கான வாய்ப்பு இன்னும் காணப்படுவதாக ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவிக்கிறது.

இழப்பீட்டுத் தொகையை உடனடியாக வழங்குவதற்கு அரசாங்கம் முன்வருமாயின் ரிஸானாவுக்கு மன்னிப்பு வழங்கக் கூடிய வாய்ப்புகள் இருப்பதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் பசில் பெர்னாண்டோ தெரிவித்தார்.

எனினும் ரிஸானா கொலை செய்ததாக கருதப்படும் பிள்ளையின் பெற்றோரை சந்தித்து இப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் இதுவரை முயற்சி எடுக்கவில்லை என பெர்னாண்டோ குற்றம் சாட்டியுள்ளார்.

## பெண்களின் நகைகளை கொள்ளையடித்த முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் கைது

(கொழும்பு)

வீதியால் செல்லும் பெண்களின் நகைகளைக் கொள்ளையடிப்பதில் ஈடுபட்டு வந்த முன்னாள் புலி உறுப்பினர்கள் மூவரைக் கைது செய்துள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு பிரதேசத்தில் வீதியால் செல்லும் பெண்களின் நகைகளை மோட்டார் சைக்கிளொன்றைப் பயன்படுத்தி கொள்ளையடித்து வந்த இருவர் மற்றும் அவர்களுக்கு உடந்தையாக இருந்த பெண்ணொருவர் ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

மூவரும் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் என்பது விசாரணையில் தெரிய வந்துள்ளதுடன், ஆண்கள் இருவரும் கொள்ளையடித்துத் தரும் நகைகளை அடகு வைத்துக்கொடுப்பதற்கான ஒத்தாசையை கைது செய்யப்பட்டுள்ள பெண் உறுப்பினரே மேற்கொண்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

தங்க நகைகள் கொள்ளையடிக்கப்படும் சம்பவம் தொடர்பில் கிடைத்த முறைப்பாடொன்றை அடுத்தே பிரஸ்தாப நபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# யாழ்.வந்த பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா பல்வேறு நிகழ்வில் கலந்து கொண்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ. எம்.ஹிஸ்புல்லா நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் நடைபெற்ற அமைச்சின் நிதி ஒதுக்கீட்டுடனான சிறுவர், பெண்களுக்கான வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கு கொண்டார்.

நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு சுயதொழில் உதவித்திட்டத்திற்கான நிதியுதவியையும் முன்பள்ளிகளுக்கான விளையாட்டு உபகரணம், கற்றல் உபகரணங்கள் என்பனவற்றை பயனாளிகளுக்கு வழங்கிவைத்தார்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நல்லூர் பிரதேச அபிவிருத்திக் குழுவினர் தலைவருமாகிய சில்வேஸ்திரி அலென்ரின், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா மற்றும் யாழ்.மாநகர சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இதேவேளை அங்கு பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகிய முன்பள்ளிச் சிறுவர்களின் பெற்றோர்களுக்கான விழிப்புணர்வுச் செயற்கூடத்திலும் தொழிற்சாலை ஊழியர்களுக்கான பயிற்சித்திட்டத்திலும் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மேலும் நேற்றுக்காலை கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு, முன்பிள்ளைப் பராய அபிவிருத்தி தொடர்பான அரச உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி, உள்ளிட்ட நான்கு பயிற்சித்திட்டங்களை ஆரம்பித்து வைத்ததுடன், சிறுவர்களின் கலாசார கலை நிகழ்விலும் உதவி வழங்கும் நிகழ்விலும் கலந்து கொண்டார் (பா)

## மாணவியை வல்லுறவுக்குட்படுத்திய ஆசிரியருக்கு விளக்கமறியல்

(வவுனியா)

பாடசாலை மாணவியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதான குறித்த ஆசிரியரை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியபோதே வவுனியா மாவட்ட நீதிவான் எம்.பி.முகைதீன் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

ஆசிரியர் ஒருவர் தான் கல்வி கற்கும் பாடசாலையைச் சேர்ந்த மாணவியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தினார் என்று செட்டிகுளம் பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து குறித்த ஆசிரியர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

## சீரான முறையில் பொருள்விநியோகம் இல்லையென மீள்குடியமர்ந்த மக்கள் விசனம்


(தெல்லிப்பளை)

அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள மக்களுக்கு வழங்கப்படும் பொருட்கள் சீரான முறையில் வழங்கப்படுவதில்லையென மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மீள்குடியமர்ந்த மக்களுக்கான கிராம அலுவலர்களினால் பதிவு செய்யப்பட்டு கத்தி, கோடரி, பூவாளி என்பன வழங்கப்படுகிறது. இவ்வாறு பதிவினை மேற்கொண்டு வழங்கப்படும் பொருட்களே சீரான முறையில் வழங்கப்படுவதில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

மீள்குடியமர அனுமதிக்கப்பட்ட ஜே230, 231, 232 ஆகிய பிரிவுகளிலுள்ள மக்களை ஓரிடத்திற்கு அழைக்கும் பொருள் வழங்குனர்கள், அவற்றை வழங்கி வரும் வகையில், சிலபொருட்கள் தீர்ந்தவுடன் அடுத்தமுறை வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறதே தவிர,அவ்வாறு வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவில்லையெனவும் தெரிவிக்கின்றனர்.

எனவே இது தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் எடுத்து இவற்றைச் சீரான முறையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.



கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற களபூமி திக்கரை முருகன் கோவிலில் தேர்திருவிழாவின் போது முருகப்பெருமான் வள்ளிதெய்வயானையுடன் தேரில் ஆரோகணிப்பதையும்,அடியார்கள் காவடி எடுத்து நேர்த்திக்கடன் செய்வதையும் படங்களில் காணலாம். (50)

# அரசாங்கம் - கூட்டமைப்பு பேச்சில் முஸ்லிம் காங்கிரஸ் மனத்தடைகளை ஏற்படுத்தும் என்கிறார் சிவாஜிலிங்கம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசாங்கத்துக்குமிடையில் நடைபெற்று பெற்று வரும் பேச்சுவார்த்தைகளில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் ஒரு தரப்பாகக் கலந்து கொளள வேண்டுமென்பதே அவர்களின் கோரிக்கையாக இருந்தால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது. அவ்வாறு கலந்து கொள்வதன் மூலம் மனத்தடைகளையே தோற்றுவிக்கும் எனத் ரெலோ இயக்கத்தின் அரசியல் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

தற்போது அரசு- கூட்டமைப்பு நடத்தி வரும் பேச்சுவார்த்தைகளில் தாமும் பங்கு கொள்ள வேண்டுமென சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வலுவான கோரிக்கையை முன்வைத்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் கருத்துக் கூறுகையிலேயே சிவாஜிலிங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் தொடர்ந்து கருத்துத் தெரிவித்துள்ள அவர், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துடன் சேர்ந்து செயற்படும் ஒரு கட்சி. இந்த நிலையில் அவர்களும் பேசவேண்டுமானால் அரசாங்கத்துடன் நேரடியாகவோ மறைமுகமாகவோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குச் சமாந்திரமாகவோ பேசிக் கொள்ளலாம்.

இந்த விடயத்தில் நாம் தடையாக இருக்கப் போவதில்லை. ஆனால், தற்போது இடம்பெற்று வரும் பேச்சுவார்த்தைகளில் தாமும் ஒரு தரப்பாகக் கலந்துகொள்ள வேண்டுமென்று அடம்பிடித்தால் அது மனத்தடைகளையே தோற்றுவிக்கும்.

தற்போது இடம்பெற்று வரும் பேச்சுவார்த்தைகளில் தமிழ் மக்களின் தாயகத்துக்கு என்ன கொடுப்பது என்று பேசப்பட்டுத் தீர்மானிக்கப்படுமாயின் அதில் முஸ்லிம்களுக்கு என்ன பங்கு கொடுப்பது என்பது பற்றி முஸ்லிம் காங்கிரசுடனும் பேசித்தான் முடிவெடுக்கப்படும். வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்கள் தாயகம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் முஸ்லிம்களுக்கும் அனைத்து உரிமைகளும் உண்டு. அவர்களைக் குறைத்து மதிப்பிட முடியாது. அத்துடன் முஸ்லிம்களின் சம்மதம் இல்லாமல் ஒருபோதும் இணைந்த வட, கிழக்கையும் பெறமுடியாது.

எது எவ்வாறெனினும், இறுதித் தீர்வு என்று ஒன்று எட்டப்படு மானால் அது முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளையும் உளளடக்கியதாகவே அமையும் என அவர் தெரிவித்துள்ளார்.

## பரவுகிறது கண் வைரஸ்

(கொழும்பு)

கண்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய வைரஸ் தொற்று நோயொன்று நாடளாவிய ரீதியில் பரவி வருவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பொதுமக்கள் அவதானமாகச் செயற்படுமாறு தேசிய கண் மருத்துவமனையின் பணிப்பாளர் கோரிக்கை விடுத்துளளார்.

குறித்த வைரஸ் நோய் தொடர்பான அறிகுறிகள் தென்படும் பட்சத்தில் வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

## தமிழ்மொழி ஆசிரிய வெற்றிடம் நிரப்புவதற்கு மாற்று நடவடிக்கை

(கொழும்பு)



தமிழ் மொழி மூல ஆசிரியர் வெற்றிடத்தை நிரப்புவதற்காக எதிர் வரும் காலத்தில் விஞ்ஞான பீடத்திற்கு தமிழ்மொழி பேசும் மாணவர்களை அதிகமாக இணைத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

புத்தளத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்தத் திட்டம் பாடசாலைகள் தோறும் நடைமுறைப்படுத்தப் படவுள்ளதாகவும், இதன் மூலம் எதிர்காலத்தில் தமிழ்மொழி மூ ல ஆசிரியர்களுக்கான தட்டுப்பாடு நிவர்த்திக்கப்படும் எனவும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார்.

## இந்திய கடல் எல்லையில் கைதான மேலும் 10 இலங்கை மீனவர் விடுதலை

(கொழும்பு)

இந்திய கடல் எல்லைக்குள் சட்டவிரோதமாகப் பிரவேசித்த குற்றச்சாட்டின் பேரில் தமிழ் நாட்டில் கைது செய்யப்பட்டிருந்த மேலும் 10 இலங்கை மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு சொந்தமான இரண்டு படகுகளையும் இந்திய அதிகாரிகள் விடுவித்துள்ளதாக கடற்தொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைசசு தெரிவித்துள்ளது.

விடுதலை செய்யப்பட்ட மீனவர்களை காங்கேசன்துறையில் வைத்து இந்திய கரையோரப் பாதுகாப்பு படையினர் இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைக்கவுள்ளனர்.

தேவேந்திரமுனை மற்றும் நில்வெல்ல ஆகிய பிரதேசங்களில் இருந்து கடற்தொழிலுக்காக சென்றிருந்த போது கைது செய்யப்பட்ட மீனவர்களே விடுதலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் கடந்த மே மாதம் 31 ஆம் திகதி தமிழ்நாடு கரையோரப் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டிருந்ததாக கடற்தொழில் மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய மேலும் 52 இலங்கை மீனர்வர்கள் தொடர்ந்தும் இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவர்கள் பயணித்த 10 படகுகளும் இந்திய அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன.

இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள அனைத்து இலங்கை மீனவர்களையும் அமைச்சர் ராஜித சேனாரத்னவின் ஆலோசனைக்கு அமைய விடுவிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக கடற்தொழில் நீரியல் வள அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## இலங்கையின் பிரதான ஆட்கொல்லியாக புற்றுநோய் மாற்றமடையக்கூடிய அபாயம்

### எச்சரிக்கிறார் மருத்துவர் கனிஷ்க கருணாரட்ன

(கொழும்பு)

இலங்கையில் புற்றுநோயாளிகளின் எண்ணிக்கை உயர்வடையக் கூடிய அபாயம் காணப்படுவதாக புற்றுநோய் வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் கனிஷ்க கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

இன்னும் ஓரிரு தசாப்தங்களில் இலங்கையின் பிரதான ஆட்கொல்லி நோயாக புற்றுநோய் மாற்றமடையக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

துரித நகரமயமாக்கல், வாழ்க்கை முறைமை மற்றும் உணவுப் பழக்க வழக்கம் ஆகியன காரணமாக புற்று நோயாளிகளின் எண்ணிக்கை உயர்வடைவதற்கான சாத்தியம் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண வைத்தியசாலையில் புற்றுநோய் பிரிவு ஒன்றை அமைப்பதற்காக நிதி திரட்டும் நோக்கில் நடைபெற்ற மாபெரும் பாதயாத்திரையில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் அதிகமானவர்களுக்கு மரணத்தை ஏற்படுத்தும் நோய்களின் வரிசையில் புற்றுநோய் மூன்றாம் இடத்தை வகிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

வாய், சுவாசப்பை, வயிறு மற்றும் கர்ப்பப்பை புற்றுநோய் ஆகியன இலங்கை மக்களை அதிகமாகத் தாக்குவதாகத் தெரிவித்துள்ளார்.

வருடாந்தம் 12,000 நோயாளிகள் புதிதாக சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக வைத்தியசாலையின் உதவியை நாடுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தனிப்பட்ட ஓர் நோயாளிக்கு பூரண சிகிச்சை அளிப்பதற்காக தலா ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான மருந்துப் பொருட்களை அரசாங்கம் விநியோகம் செய்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எட்டு வீதமான புற்றுநோயாளிகளை முழுமையாகக் குணப்படுத்தக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

## சனத்தொகை மதிப்பீடு பயிற்சி வகுப்பு ஆரம்பம்

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் வாழ்நிலைத் தகவல்களைக் கணக்கெடுத்தலுக்கான பயிற்சி வகுப்புகள் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகியுள்ளன. பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சும் இணைந்து மேற்கொள்ளும் இந்த நடவடிக்கை புள்ளவிபரத் திணைக்களத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வீடு வீடாகச் சென்று ஆசிரியர்கள் புள்ளிவிபரம் திரட்டவுள்ளனர். யாழ். மாவட்டத்தில் ஆரம்பமான பயிற்சி வகுப்புக்களில் முதல் நாள் வகுப்பில் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் குறிப்பிட்டளவு ஆசிரியர்கள் பயிற்சி வகுப்புகளுக்கு சமுகம் தரவில்லையென தெரிய வருகின்றது.



மக்கள் வங்கியின் பொன்விழாக் கொண்டாட்ட நிகழ்வுகள் பிரதான வீதியில் அமைந்துள்ள வங்கிக் கிளையில் நடைபெற்றபோது யாழ்ப்பாண பிரதேச செயலர் சுகுணரதி தெய்வேந்திரம் தேசியக்கொடியேற்றுவதையும், தபால் அத்தியட்சகர் இரட்ணசிங்கம் மங்கள விளக்கேற்றுவதையும், வங்கி முகாமையாளர் எம்.சிவசுப்பிரம்ணியம் கேக் வெட்டுவதையும், ஞாபகார்த்தமாக பலூன் பறக்க விடுவதையும் காணலாம். (26)

# கூம்பு வடிவில் தலை



கடந்த காலங்களில் வாழ்ந்த ஒரு குழந்தைக்கும் வித்தியாசமான வடிவில் அதாவது கூம்பு வடிவில் தலை காணப்பட்டுள்ளது. இந்தச் சிறுவனின் செய்தி ஆசியாவில் காணப்பட்ட வினோத மனிதர்களுள் முக்கிய இடத்தைக் குறிப்பிட்ட காலத்தில் பிரபல்யமடைந்து காணப்பட்டுள்ளது. காரணம் இச்சிறுவனின் இந்த நிலைக்கு வைத்தியர்களால் சரியான காரணத்தைக் கண்டறிய முடியவில்லை. எனினும், அமெரிக்காவுக்கும் வியட்நாமுக்கும் இடையில் நடந்த யுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட, இரசாயனத் தாக்கததால் தான் இவ்வாறு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. மேலும் குறித்த சிறுவனின் கண்களும் பெரியளவு காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. கடந்த 2005 ஆம் ஆண்டு இச்சிறுவனை வைத்தியர்கள் பரிசோதித்த னர். அப்போது இவனுக்கு 5 வயது. ஆனால் தற்பொழுது இச்சிறுவனின் நிலைமை பற்றிய எந்த செய்திகளும் வெளியாகவில்லை.

# இராட்சத எலி

சீனாவின் தெற்குப் பகுதியான யுனான் நகரில் அண்மையில் இராட்சத எலி ஒன்று பிடிக்கப்பட்டுள்ளது. அனைவரையும் வியப்பில் ஆழ்த்திய இந்த இராட்சத எலி பூனையின் தோற்றத்தை ஒத்ததான மிகப்பெரிய அளவில் காணப்பட்டுள்ளது. இதன் வால்கள் கிட்டத்தட்ட 10 அங்குல அளவுகளாகவும் பற்கள் 2.5 சென்ரி மீற்றர் நீளம் கொண்டதாகவும் காணப்பட் டுள்ளது. மேலும் 6 தொடக்கம் 8 இறாத்தல் வரையிலான உடல் எடையைக் கொண்டதாகவும் காணப்பட்டுள்ளதாம் இந்த இராட்சத எலி. இவ்வகை எலிகளின் சாதாரண வளர்ச்சி இவ்வாறே இருக்கும் எனக் கூறப்படுகிறது. இது 'வம்போ' எனப்படும் ஒருவகை எலியாகும் என இதனை பிடித்த நபர் குறிப்பிட் டுள்ளார். இதற்கு முன்ன ரும் இவ்வாறான இராட்சத எலிகள் வெவ்வேறு காலப் பகுதியில் வெவ்வேறு பிர தேசங்களில் பிடிபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



# இதுவரை பார்க்காத

எத்தனையோ விதவிதமான சைக்கிள்கள் பற்றி அறிந்திருபபீர்கள் உலகிலயே மிகப் பாரமான சைக்கிள். மூங்கில் மூலம் செய்த சைக்கிள், மரத்தால் ஆன, பூட்டாக மாறும் சைக்கிள், உலகில் விலை யுயர்ந்த சைக்கிள், மிகவேகமாக ஓடும் சைக்கிள், ஒற்றைச் சக்கரத் தில் ஓடும் சைக்கிள் என ஏராளமான செய்தி களை நீங்கள் படித்திருப் பீர்கள் இந்தச் சைக்கிளின் பெயர் பரல் பைக் (BARREL BIKE). மொத்தம் மூன்று பரல்களைக் கொண்டு இது அமைக்கப் பட்டுள்ளது.




பார்ப்பதற்கு ஒரு வித்தியாசமாக முயற்சியாக இருந் தாலும் மணிக்கு 5 கிலோ மீற்றர் வேகத்தில் மட்டுமே இதில் பயணம் செய்ய முடியும்.

# மிகப்பெரிய புத்தகம்

துபாயில் உள்ள உலகின் மிக உயரமான கட்டடமான Burij என்ற கட்டிடத்தில்தான் இந்த உலகின் மிகப்பெரிய புத்தகம் உள்ளது. 16 அடி உயரமுள்ள இந்தப் புத்தகம் பட்டுநூல் காகிதத்தினால் செய்யப்பட்டதாகும்.

இந்தப் புத்தகத்தில் உயரமான கட்டடத்தை உருவாக்க உழைத்த 100 பேரைப் பற்றிய தக வல்கள் அடங்கி யுள்ளது. இந்தப் புத்தகத்தை உருவாக்க ரூபாய் 5.2 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.



# தங்கத்தினால் சிலை

தங்கம் மற்றும் வைரங்களை வைத்து 18,17,355டொலர்கள் மதிப்புள்ள Santa Claus என்ற சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் உயரம் 41 சென்ரிமீற்றர் ஆகும். 20 கிலோ எடையுள்ள இந்த சிலையில் 1.7 கரட் மதிப்புடைய வைரக்கற்கள் பதிக்கப்பட்டுள்ளன.



# வேகமான கார்

1970 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட Rolls-Royce என்ற நிறுவனத்தின் கார்தான் உலகின் மிகவேகமாகச் செல்லும் கார் என்ற பெருமையை பெற்றுள்ளது. இந்தக் காரின் வேகம் 1350 குதிரைகளின் வேகத்திற்கு சமமாகும். இந்தக் காரின் விலை 3,18,000 டொலர்கள் ஆகும்.



# மெக்கானிக் சிவில் துறையினருக்கு

தொழில்நுட்ப வரைபடங்கள் , கட்டடக்கலைத் திட்டங்கள், கிராபிக் வடிவமைப்பு மற்றும் இயந்திர பாகங்களின் வடிவமைப்புக்கு உதவும் ஒரு பயனுள்ள இலவச மென்பொருளைப் பற்றித்தான் இந்தப்பதிவு. மெக்கானிக் துறையில் டிசைன் என்ற வார்த்தையைக் கேட்டதும் உடனடியாக கணினியில் என்ன மென்பொருள் பயன்படுத்துகிறீர்கள் என்று யாரும் கேட்பதற்கில்லை. காரணம் அனைவருக்குமே தெரியும் ஆட்டோகேட் (AutoCAD) மென்பொருள்தான் அது, AutoCad ஒரு பெரிய கடல்தான். இதில் இருக்கும் பல சேவைகளைக்கூட நாம் இன்றும் பயன்படுத்தாமல்தான் இருக்கிறோம், இந்நிலையில் தொழில்நுட்ப வரைபடங்கள் வரைய ஒரு பயனுள்ள இலவச மென்பொருள் வந்துள்ளது, மென்பொருளின் பெயர் LibreCAD.


தரவிறக்க முகவரி: http://sourceforge.net/projects/librecad/files/Windows/LibreCAD-Latest.exe/download

இத்தளத்திற்கு சென்று மென்பொருளை இலவசமாக தரவிறக்கி நம் கணினியில் நிறுவலாம். இது விண்டோஸ் மற்றும் லினக்ஸ் பதிப்புகளில் கிடைக்கிறது. நமது சொந்த வேலை மற்றும் அலுவலக வேலைக்கும் இந்த மென்பொருளை இலவசமாக பயன்படுத்திக்கொள்ளலாம், 2D இல் அனைத்துவிதமான கடினமான படங்களும் எளிதாக சில மணித்துளிகள் செலவு செய்து வரையும் வண்ணம் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. AutoCad பயன்படுத்தும் நண்பர்களுக்கும் இந்த மென்பொருளைப் பயன்படுத்தி இதில் இருக்கும் பல சிறப்பான சேவை களை எளிதாகப் பயன் படுத்தலாம்.

கணினி மூலை

## இந்தியச் செய்திகள்

# அமைச்சரவை மாற்றம் தொடர்பாக மன்மோகன் சிங்-பிரதீபா ஆலோசனை



(புதுடில்லி)

இந்திய மத்திய அமைச்சரவையில் மாற்றங்களை ஏற்படுத்துவது தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங், குடியரசுத் தலைவர் பிரதீபா பட்டேலைச் சந்தித்து நீண்ட நேரம் ஆலோசனை நடத்தியுள்ளார். ஊழல் புகார்கள் தொடர்பாக மத்தியில் உள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு கடும் நெருக்டிகளை சந்தித்து இருக்கின்றது.

இதனையடுத்து அமைச்சரவையில் பாரிய மாற்றங்களைச் செய்ய பிரதமர் திட்டமிட்டு வருகின்றார். இந்த நிலையிலேயே குடியரசுத் தலைவருடன் இவ்விடயம் குறித்து கடந்த வெள்ளிக்கிழமை அவர் சந்தித்து ஆலோசனையை நடத்தியுள்ளார்.

அமைச்சரவை மாற்றத்தைப் பொறுத்தவரை கபில் சிபல் வசம் தொலைத் தொடர்புத்துறை நீடிக்கும் என்றும் ஜோதிராதித்யா சிந்தியாவுக்கு இணைஅமைச்சர் பதவி வழங்கப்படலாம் என்றும் தெரிகிறது.

சிறையிலுள்ள மத்திய அமைச்சர் ராசாவின் இடத்திற்குப் பதிலாக தி.மு.க.விலிருந்து டி.ஆர்.பாலு அமைச்சராக்கப்படலாம் என்று தெரிகிறது. அவரை பிரதமர் விரும்பாவிட்டால் டி.கே.எஸ். இளங்கோவன் அமைச்சராக்கப்படலாம். தயாநிதி மாறனின் விவகாரம் தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பாக தகவல்கள் எதுவும் வெளிவரவில்லை. அதே சமயம், வேறு சில அமைச்சர்கள் நீக்கப்படக் கூடும் என்றும் தெரிகிறது.

# கேரள மாநில ஆலயமொன்றிலிருந்து 1,20,000 பெறுமதியான நகைகள் மீட்பு

(திருவனந்தபுரம்)

இந்தியாவின் கேரள மாநிலத்திலுள்ள ஸ்ரீ பத்மநாப ஸ்வாமி கோவிலின் பாதாள அறைகளிலிருந்து பாரிய அளவிலான தங்கம் மற்றும் இரத்தினங் கள் பண்டைய நாணயங்கள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த நகைகளின் பெறுமதி உத்தியோபூர்வமாக இதுவரை மதிப்பிடவில்லை. ஆனால் இவற்றின் பெறுமதி சுமார் 50,000 கோடி இந்திய ரூபாவாக (சுமார் 120,000கோடி இலங்கை ரூபா) இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

திருவனந்தபுரத்திலுள்ள இவ்வாலயத்தில் இதுவரை பூட்டப்பட்டிருந்த பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்ட இரு சுரங்க அறைகளில் ஒன்றுக்குள் மேற்படி ஆலயத்தின் தர்மகர்த்தாக்கள் கடந்த வியாழனன்று சென்று பார்த்தபோது புதைந்துபோன ஒரு தங்க நகரத்தையே கண்டுபிடித்த உணர்வு அவர்களுக்கு ஏற்பட்டதாம்.

தீயணைப்பு குறுகிய படிக்கட்டுகள் வழியாக அவர்கள் இந்தப் பாதாள அறைக்குள் சென்றனர். தீயணைப்புப் படையினர், மற்றும் தொல்பொருள் திணைக்களத்தின் உதவியும் இதற்காக பெறப்பட்டது. அந்த அறைக்குள் ஒட்சிசன் வாயு செலுத்தப்பட்டதுடன் செயற்கை வெளிச்சமும் பாய்ச்சப்பட்டது.



அதன்பின் அங்கு பெருந்தொகை தங்க ஆபரணங்கள், தங்க நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அந் நகைகளில் பல ஆயிரக்கணக் கான ஆண்டுகளுக்கு முந்தியவையாகும்.

9 அடி நீளமான 2.5 கிலோகிராம் எடையுள்ள தங்க நெக்லஸ்கள், இரத்தினங்களால் நிரப்பப்பட்ட சாக்குப் பை, தங்கச் சங்கிலிகள், இரத்தினங்கள் மற்றும் மரகத தங்கள் பதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான நகைகள், மன்னர்கள் அணியும் முடி உட்பட பல பொருட்கள் 'ஏ'என அடையாளமிடப்பட்ட அறையிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டன.

# ஒரு இலட்சம் கோடி ரூபா மானியத் திட்டத்துடன் புதுடில்லி செல்கின்றார் முதல்வர் ஜெயலலிதா

(சென்னை)

மத்திய அரசாங்கத்திடம் தமிழகத்திற்காக ஒரு இலட்சம் கோடி ரூபா மானியம் பெறும் திட்டத்துடன் தமிழக முதல்வர் ஜெயலலிதா நாளை மறுதினம் புதுடில்லி பயணமாகவுள்ளார்.

கடந்த மாதம் 14ஆம் திகதி புதுடில்லி சென்றிருந்த முதலமைச்சர் ஜெயலலிதா பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து தமிழக வளர்ச்சித்திட்டங்களுக்கு ஒரு இலட சம் கோடி ரூபா மானியம் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தார்.

இதேவேளை, எதிர்வரும் புதன்கிழமை புதுடில்லியில் நடைபெறும் மத்திய திட்டக் குழுக்கூட்டம் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

தமிழ்நாட்டில் மின் உற்பத்தி, தமிழக நதிகள் இணைப்பு, சிறப்பு பொதுவிநியோகம், மோனோ புகையிரதம் உள்பட பல்வேறு அரச திட்டங்கள் நிறைவேற்றப்பட உள்ளன. இதற்கு தேவையான நிதியை ஒதுக்கக் கூட்டத்தில் முதலமைச்சர் வற்புறுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே, பிரதமரிடம் ஒரு இலட்சம் கோடி மானியம் கேட்டுள்ளார்.



# சாதிக்பாட்ஷாவின் மரணத்திற்கும் தி.மு.க.வுக்கும் தொடர்பு இல்லையாம்

(சென்னை)

ஆ.ராசாவின் நெருங்கிய நண்பர் சாதிக் பாட்ஷாவின் தற்கொலைக்கும், தமக்கும் தொடர்பில்லை என்று தி.மு.க. தெரிவித்துள்ளது.

முன்னாள் தொலைதொடர்புத்துறை அமைச்சர் ஆ.ராசாவின் நெருங்கிய நணபர் சாதிக் பாட்ஷா. சென்னை தேனாம்பேட்டையில் உள்ள தனது வீட்டில் கடநத மார்ச் 16 ஆம் திகதி தூக்கில் தொங்கிய நிலையில் பிணமாகக் கண்டெடுக்கப்பட்டார். 2ஜி வழக்குத் தொடர்பாக அவரிடம் நடத்தப்பட்ட சி.பி.ஐ. விசாரணையால் மன உளைச்சலில் இருந்து வந்த அவர் தற்கொலை செய்து கொண்டதாக அவரது மனைவி மற்றும் உறவினர்கள் கூறினர்.

ஆனால் சம்பவம் நடந்து பல மணி நேரத்திற்குப் பின்பு தான் பாட்ஷா்வின் மரணம் குறித்த தகவல் வெளியானதால் அதுகுறித்து பல்வேறு சந்தேகங்கள் எழுந்தன. அப்போது தி.மு.க. ஆட்சியில் இருந்தது.

இந்நிலையில் சாதிக் பாட்ஷாவின் மரணத்திற்கும், தங்களுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று இன்று தி.மு.க. தெரிவித்துள்ளது. இது குறித்து எந்த விசாரணையையும் சந்திக்கத் தயார் என்றும் அது தெரிவித்துள்ளது.

# தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகளுக்கு ஓய்வூதியத்திட்டங்கள் வழங்க நடவடிக்கை


(சென்னை)

தமிழகத்தில் உள்ள அகதிகள் முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு தமிழக அரசின் சமூக நல பாதுகாப்புத்துறை சார்பில் வழங்கப்பட்டு வரும் பல்வேறு ஓய்வூதியத்திட்ட பலன்கள் வழங்கப்படவுள்ளன.

இலங்கையில் நடைபெற்ற போரின் போது தமிழகத்திற்கு அகதிகளாக வந்த இலங்கைத் தமிழர்களின் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைத் தமிழர்கள் மதிப்புடன் வாழத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி தமிழக முதலமைச்சர் ஜெய லலிதா அமைச்சர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இதன்படி இலங்கைத் தமிழர்களுக்கு தேவையான சுகாதாரம், கல்வி, இருப்பிடம், குடிநீர், மருத்துவம் உள்ளிட்ட வசதிகள் வழங்கப்பட உள்ளன. இலங்கைத் தமிழர்கள் படிப்பதற்கும், அவர்கள் வேலை வாய்ப்பு பெறத்தேவையான பயிற்சி வழங்கவும் முதலமைச்சர் உத்தரவிட்டார். மேலும் தமிழக அரசின் சமூக நல பாதுகாப்புத்துறை சார்பில் வழங்கப்படும பல்வேறு ஓய்வூதிய திட்டங்களை இலங்கை தமிழர்களுக்கு வழங்கவும் முதலமைச்சர் உத்தரவிட்டார். இதன்படி முதியோர் ஓய்வூதியம், ஆதரவற்ற விதவை ஓய்வூதியத் தொகை, கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான உதவித்தொகை உள்ளிட்ட உதவித் தொகைகள் வழங்கப்படவுள்ளன.



தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவை சென்னைத் தலைமைச் செயலகத்தில் மரியாதை நிமித்தம் சந்தித்துப் பேசினார் ராஷ்டீரிய லோக்தள் கட்சித் தலைவர் அஜித்சிங்.

# தயாநிதிமாறன் பதவி விலகக்கோரி பா.ஜ.க. போராட்டம் நடத்த முடிவு

(சென்னை)

ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் தயாநிதி மாறன் பதவி விலக கோரி போராட்டம் நடத்தப்படும் என்று பா.ஜனதா அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக பா.ஜனதா செய்தித் தொடர்பாளர் ரவிசங்கர் பிரசாத் தெரிவிக்கையில்,

2ஜி அலைக்கற்றையை முறைகேடாக ஒதுக்கீடு செய்த விவகாரத்தில் தயாநிதி மாறனுக்கு உள்ள தொடர்பு குறித்து சி.பி.ஐ. அளித்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் மத்திய அமைச்சர் பதவியில் இருந்து தயாநிதி மாறனை நீக்க வேண்டும்.

இதை வலியுறுத்தி நாடு தழுவிய அளவில் பா.ஜனதா சார்பில் போராட்டம் நடத்தப்படும்.

ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி தொடங்கவுள்ள நாடாளுமன்ற மழைக் காலக் கூட்டத் தொடரில் உரிய முறையில் நாடாளுமன்றத்தின் இரு சபைகளிலும் இந்த விவகாரத்தை எழுப்பி அவரைப் பதவியில் இருந்து நீக்கும் வரை போராட முடிவு செய்துள்ளோம் என்றார்.



## ஞாயிறு நற்சிந்தனை

### ஓ...மதுரமான திருஇருதயமே!

இயேசுவின் திருஇதயம், அது எதையும் தாங்கும் இதயம். உன்னுடையவும், உலகின் எல்லா மக்களுடைய எல்லாச் சுமைகளையும் தாங்கும் இதயம். உன் எல்லாச் சுமைகளையும் தாங்கும் சுமை தாங்கி அந்த இயேசுவின் திருஇதயம்.

இறைவனிடம் வந்து நம் சுமைகளை அவரிடம் இறக்கி வைத்து, இளைப்பாறுதல் என்பது நம் பொறுப்புக்ளைக் கை கழுவிவிடுவதல்ல. மாறாக, நம் பெருஞ்சுமைகளை அவரிடம் இறக்கி வைத்து, சில சிறிய எளிய சுமையை, அழுத்தாத நுகத்தை நம்மீது ஏற்றுக்கொள்வது. ஆகவே, வாழ்க்கைப் போராட்டத்தில் இளைப்பாற்றி என்பது, இறைவனோடு பகிர்ந்து கொள்வதும் இறைவன் தருவதை இறைவனோடு இணைந்து சுமப்பதும் ஆகும். இயேசுவின் திருஇதயம், சோர்ந்து மனம் உடைந்து தன்னிடம் தஞ்சம் அடையும் அனைவருக்கும் புகலிடமாகி புதுவாழ்வு வழங்குகிறது. இயேசுவோடு சேர்ந்து அவர் தரும் மாற்றுச் சுமையை மனமுவந்து சுமப்போம். நமக்கு நம் சுமை பெரிதாகத் தோன்றாது. சுமையாக இருக்காது. புதிய அனுபவமாக இருக்கும்.

*மறையாசிரியர்*
*யா. அலெக்ஸ்சாண்டர்*

# ஐந்து இலட்சம் பேர் பங்குகொண்ட சிரிய அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டம்

## 14 பேர் உயிரிழந்ததாகவும் தகவல்



(டமாஸ்கஸ்)


சிரியாவில் அரசாங்கத்திற்கு எதிராக மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தில் ஐந்து இலட்சம் மக்கள் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை, போராடடக்காரர்கள் மீது பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில் 14 பேர கொல்லப்பட்டுள்ளதாக மனிதஉரிமை அமைப்புக்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

தலைநகர் டமாஸ்கஸ் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் மக்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தியதாகக் குறிப்பிடப்படுகிறது. சிரிய ஜனாதிபதி பசர் அல் அஸாடிற்கு எதிராக நடத்தப்பட்ட மிகப் பெரிய ஆர்ப்பாட்டம் இதுவெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, துரித கதியில் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் பாதக விளைவுகள் ஏற்படும் என அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்ரன் தெரிவித்துள்ளார்.


லிதுவேனியாவிற்கு மேற்கொண்டிருந்த விஜயத்தின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.யதார்த்தமான மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால பாரியளவிலான மக்கள் கிளர்ச்சியைத் தடுக்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மார்ச் மாத நடுப்பகுதி முதல் நடைபெற்று வரும் மோதல்களில் 1300 பொது மக்களும், 350 படைவீரர்களும் கொல்லப்படடுள்ளதாக மனித உரிமை அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

பேச்சுவார்த்தைகளுக்குத் தயார் என ஜனாதிபதி அறிவித்த போதிலும், ஜனாதிபதி பதவி விலக வேண்டுமென ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். அரை மில்லியனுக்கும் அதிகமானவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டதாகக் குறிப்பிடப்படுகிறது. அரசாங்கத்திற்கு ஆதரவான தரப்பினரும் போராட்டங்களை நடத்தி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.



**கனடாவில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் 3400 பேர் பங்குபற்றிய மனித தேசியக் கொடியை அமைத்துச் சாதனை புரிந்துள்ளனர்.**

# சர்வதேச நாணய நிதியத்தின் முன்னாள் தலைவர் பாலியல் குற்றச்சாட்டு வழக்கிலிருந்து விடுதலை?



(நியூயோர்க்)

பாலியல் குற்றச்சாட்டின் பேரில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் முன்னாள் தலைவர் டொமினிக் ஸ்டராஸ் மீதான குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவையெனவும் அவர் விடுதலை செய்யப்படவிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சர்வதேச நாணய நிதிய முன்னாள் தலைவர் டொமினிக் ஸ்ட்ராஸ் கான், தம்மிடம் தகாத முறையில் நடக்க முயன்றதாக அமெரிக்காவின் மன்ஹாட்டன் நகர விடுதி பணிப்பெண் ஒருவர் கடந்த மே மாதம் முறைப்பாடு செய்திருந்தார். இதையடுத்து, ஸ்ட்ராஸ் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டதுடன், அவர் மீது வழக்கு தொடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

இப்படி தெளிவான ஆதாரம் உள்ளபோதிலும், குற்றம் சாட்டிய பெண்ணின் வாக்குமூலம் நம்பக்கூடியதாக இல்லை என அரசுத் தரப்பு வழக்கறிஞர் கூறியுள்ளார். எனவே, ஸ்ட்ராஸ் கானை விடுதலை செய்வது குறித்து சட்ட நிபுணர்களுடன் ஆலோசனை நடைபெற்று வருகிறது.

ஆரம்பம் முதலே இந்த பெண் முன்னுக்குப் பின் முரணான தகவல்களை கூறி வருகிறார். மேலும் இந்த பெண்ணுக்கு போதை கடத்தல் மற்றும் கறுப்பு பண கும்பலுடன் தொடர்பு இருப்பது தெரிய வந்துள்ளது. இதனால் இவரது வாக்குமூலம் நம்பக்கூடியதாக இல்லை என்று புலனாய்வு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். பிரான்சைச் சேர்ந்த ஸ்ட்ராஸ் அதிபர் தேர்தலில் போட்டியிட திட்டமிட்டிருந்தார். இவருக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் நோக்கத்தில் சதி செய்துள்ளதாக இவரது வழக்கறிஞர் குற்றம் சாட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# பழங்குடியினர் வாழும் பகுதிகளிலேயே பாகிஸ்தானில் வெடிகுண்டுத் தொழிற்சாலை

## அமெரிக்க எதிர்க்கட்சி செனட்டர் தகவல்

(வொஷிங்டன்)

பாகிஸ்தானில் பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளில் வெடிகுண்டுத் தொழிற்சாலைகள் இருப்பது பற்றிய இரகசியத் தகவல்கள் ஐ.எஸ்.ஐ. மூலம் வெளியாகி இருப்பதாக அமெரிக்க எதிர்க்கட்சியான குடியரசு கட்சியின் செனட்டர் ஜான் மிக்கைன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, வொஷிங்டனில் கருத்துத் தெரிவித்த அவர், பாகிஸ்தான் இராணுவமும், ஐ.எஸ்.ஐ.யும், அந்நாட்டின் பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளில் உள்ள வெடிகுண்டு தொழிற்சாலைகள் தொடர்பான விடயங்களை பரிமாறிக்கொண்ட இரகசிய தகவல்கள் அமெரிக்காவுக்குக் கிடைத்துள்ளன. செயற்கைக்கோள் மூலம் கண்காணிப்பு மேற்கொண்டபோது, அந்தத் தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்டன. இது கவலை அளிப்பதாக உள்ளது. எனவே, பாகிஸ்தானுக்கான நிதியுதவியை முடக்க அமெரிக்கா உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்என்றார்.

இதேவேளை, பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. அந்நாட்டில் உள்ள பயங்கரவாத அமைப்புகளுக்கு பயிற்சி அளிப்பதுடன், நிதியுதவியும் அளித்து வருகிறது. பாகிஸ்தானில் 80 சதவீத அளவிற்கு அமோனியம் நைட்ரேட் தொழிற்சாலைகள் உள்ளன. இங்கிருந்து ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதிகளில் வெடிகுண்டு தயாரிக்க, அமோனியம் நைட்ரேட் கொண்டு செல்லப்படுகிறது. ஆப்கானிஸ்தான் மக்கள் மற்றும் அமெரிக்கர்களைக் கொல்ல இந்த வெடிகுண்டுகள் பயன்படுத்தப்படுகின்றன என்று, அமெரிக்க இராணுவ தலைமையகத்தின் முன்னாள் ஜெனரல் ஜேக் கீன் தெரிவித்துள்ளார்.

## ஊழல் மோசடிகளைத் தடுக்க சீன ஜனாதிபதி நடவடிக்கை



(பீஜிங்)


ஊழல் மோசடிகள் குறித்து கம்யூனிஸ்ட் கட்சி கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென சீன ஜனாதிபதி ஹு ஜின் டாவோ தெரிவித்துள்ளார. சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 90 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஊழல் மோசடிகள் இடம்பெற்றால் மக்களுக்கும் கட்சிக்கும் இடையிலான இடைவெளி அதிகரிக்கும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். கட்சியின் சில உறுப்பினர்களின் நடவடிக்கையினால் ஒட்டு மொத்த கட்சிக்கும் பாதக நிலை ஏற்படக் கூடும் என அவர் தெரிவித்துள்ளார்.

90 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வில் பெரும் எண்ணிக்கையிலான கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். ஆண்டு நிறைவினை முன்னிட்டு திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. கட்சித் தலைமைப் பதவியை வகித்து வரும் ஜின்டாவோ அடுத்த ஆண்டு பதவியிலிருந்து ஓய்வு பெற்றுக்கொள்ளத் திட்டமிட்டுள்ளார் எனவும் தெரிய வருகிறது.

# மெய்தான் பாருங்கோ!

## மொழிப் படிப்பு அவசியம்



ஒரு நாட்டில் எத்தனை மொழி பேசப்படுகிறதோ அத்தனை மொழியளிலையும் எழுத,வாசிக்கத் தெரியாட்டிலும், அடுத்தவையோடை பேசுறதுக்கும் அவையளின்ர உணர்வுகளைப் புரிஞ்சு கொள்ளுறதுக்கும் கொஞ்சமாவது படிக்கத்தான் வேணும் பாருங்கோ.

எங்கட நாட்டில நடந்த அழிவுகளுக்கு மொழிப் பிரச்சினையும் ஒரு காரணமெண்டதை எல்லோரும் ஏற்றுக்கொள்ளத்தான் வேணும்.

சிங்களப் பிள்ளையள் தமிழைப் படிக்க... தமிழ்ப் பிள்ளையள் சிங்களத்தைப் படிச்சிருந்தால் நாடும் சரி, நாங்களும் சரி இப்படி நாறிப் போயிருக்கமாட்டம். சிங்கள மொழிய அரச கரும மொழியாக்கின பிறகு, சிங்களச் சனத்துக்கு தமிழ் படிக்க அவசியமில்லாமல் போயிட்டுது. ஆனாப் பாருங்கோ! அரசாங்க உத்தியோகம் பாக்க விரும்பின எங்கட தமிழ் ஆட்கள் சிங்கள மொழியைக் கட்டாயம் படிக்க வேண்டிய சூழ்நிலை ஒரு புறமிருக்க, அதுக்குப் பிறகு சிங்கள அரியாசனத்தில ஏறின ஆட்களெல்லாம் ‘சிங்களம் - சிங்களவன் - சிங்கள தேசம்’ எண்டு தங்கட இருப்புகளுக்காக இனவாதத்தைப் பேச வெளிக்கிட, சிங்களச் சனத்துக்கு தமிழில ஒரு வெறுப்பும் வன்மமும் வளர்ந்திட்டுது பாருங்கோ.

சிங்களம் படிக்கிறதால எங்கட நாக்கொண்டும் தீட்டுப்பட்டுப் போகாது. அது முந்தியொருகாலம் படிக்கேலாமல் இருந்தது உண்மைதான். தமிழ்ச் சனத்துக்கு சிங்களம் தெரிஞ்சா, தங்கட ‘பொட்டுக்கேடுகளை’ வடபகுதிக்கு வாற சிங்கள அமைச்சர்மாரிட்டை சொல்லிப் போடுவினம் எண்ட பயத்தில “சிங்களம் படியாதையுங்கோ! அது எங்கட வாழ்க்கையச் சீரழிச்சுப் போடும்” எண்டு தமிழ் இனவாதத்தை எங்கட தலையில ஊத்தி வளத்ததுகள், கொழும்பில என்ன மொழியில இப்ப பேசுகினம் எண்டதை சிங்களம் படிக்கிறதுக்கு எதிர்ப்புக்காட்டுற ஆக்கள் கொஞ்சம் சிந்திச்சுப் பாருங்கோவன்.

இனத்தில இப்ப சிங்களச்சனம் பெரும்பான்மை இனமாக இருக்கிறது மட்டுமல்ல, ஆட்சி நடத்துற ஆட்களும் அறுதிப் பெரும்பான்மையோட ஆட்சி நடத்துகினம். இந்த நிலையில, எங்களுக்கு கொழும்பில ஒரு அரசாங்க அலுவலெண்டால் மொழி பெயர்க்கிறதுக்கு சிலபேரைப் பிடிக்கிறத்துக்கு முன்னாலும் பின்னாலும் திரிய வேண்டிக் கிடக்குது பாருங்கோ. அப்பிடியே தேடித் திரிஞ்சு பிடிச்சாலும், அவையள் காட்டுற ‘பந்தா-பகட்டு - பலநடிப்பு’களைப் பாக்க எங்களுக்குத் தலையே வெடிச்சிடும் போலக்கிடக்குது. இதெல்லாம் எங்களுக்குத் தேவையா? நாங்கள் அந்த மொழியைப் படிச்சு வைச்சிருந்தால ஏன் இப்படி இடறுப்பட வேணும்.

இனங்களுக்கிடையில மொழியறிவு ஓரளவுக்காவது இருந்தால்தான் ஐக்கியம் வளரப்பாக்கும். இதை ஆதியில இருந்த சிங்களத் தலைமைகளோ, எங்கட தமிழ்த் தலைமைகளோ சரியாப் புரிஞ்சு கொள்ளேல்லை. வடக்கையும், தெற்கையும் இரண்டு படவைத்து, சும்மாயிருந்த பொடி, பெட்டையளை உசுப்பேத்தி அடிபட விட்டிட்டு, நடுவில யிருந்து கொண்டு அதுகள் ‘அரசியல் குளிர்’ காய்ஞ்சதுதான் மிச்சம்.

ஆனா, சனாதிபதி சிங்களப் பிள்ளையளும் தமிழ்ப் படிக்க வேணும்... எண்டு சொன்னது சந்தோஷப்படக்கூடிய விசயம். ஏனெண்டாப் பாருங்கோ இனிவாற சிங்கள இனத்தின் சந்ததி எங்களைப் புரிஞ்சு கொள்ளுறதுக்கு உதவியாயிருக்கும். இதே மாதிரி எங்கட தமிழ்ப் பிள்ளையளும் சிங்கள மொழி படிச்சுதுகளெண்டால் ‘கம்பஸ்சுக்கு’ எடுபட்டு கண்டி, களனி, கொழும்பெண்டு மேற்படிப்புப் படிக்கப் போகேக்கை அங்கத்தே சிங்களப் பிள்ளையளோடை பேசிப் பழகுறதுக்கு இலகுவாயிருக்குமல்லோ.

இதுவரை காலமும் நாங்கள் மொழி தெரியாமல்பட்ட கஷ்டம் மாதிரி இனிவாற எங்கட சந்ததியும் படக்கூடாது. இதுக்கு மொழியறிவு அவசியம் பாருங்கோ.

இண்டைக்கு இஞ்சாலிப்பக்கம் இதால வந்தாப் போல உதுகளைச் சொல்ல வேண்டி வந்திட்டுது. ஆனாலும் சில பேருக்கு உள்ளுக்கை ‘வேக்காளம்’ வீங்கிப் பெருத்து விமர்சனம் செய்ய வெளிக்கிடுவினம். ‘துரோகி’யெண்டும் தூற்றுவினம். உவையளைப் பற்றி, படிக்கிற பிள்ளையளைப் பெத்து வைச்சிருக்கிற தாய், தேப்பன்மார் விளங்கி, உதுகளை விலக்கி வைச்சால் நமக்கு நல்லது! நாட்டுக்கும் நல்லது! நம்முடைய நாளைய சந்ததிக்கும் நல்லது பாருங்கோ.

**-சின்னக்குட்டி சின்னச்சாமி-**

# அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தல்?

**Daily Mirror ஆங்கில நாளேட்டில் அதன் பத்தி எழுத்தாளர்களில் ஒருவரான ஹரீம் பீரிஸ் எழுதியிருப்பது:**

மனித உரிமைச் சபையின் செப்ரெம்பர் மாதக் கூட்டத்தொடர் ஆரம்பமாகும் போது வல்லுநர்கள் குழுவின் அறிக்கையினை அடியொற்றிய தொடர் நடவடிக்கையினை ஐரோப்பிய ஒன்றியம் முடுக்கிவிடக் கூடும்.

நிலைமையினை நன்கு அவதானிககும் சாதாரண நபர் ஒருவர் கூட ஆச்சரியமடையும் அளவிற்கு சிறிலங்காவில் இடம்பெற்றது எதுவோ அதற்குப் பொறுப்புச் சொல்லும் செயன்முறைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற அனைத்துலக வாதம் கடந்த நாட்களில் அதிகரித்திருந்தது. தற்போது இந்த அனைத்துலக அழைப்பு ஒரு உச்ச நிலையினை அடைந்திருக்கிறது.

சிறிலங்காவினது போரின் இறுதி நாட்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் அனைத்துலக சட்டங்கள் மீறப்பட்ட அனைத்துச் சம்பவங்கள் தொடர்பிலும் விசாரணைகள் நடத்தபபடவேண்டும் என்ற இந்தியர்கள் தொடக்கம் ஐ.நா கட்டமைப்பு வரைக்கும்,

அமெரிக்கா முதல் ஐரோப்பா ஒன்றியம் வரைக்கும், பொதுநலவாய நாடுகளின் செயலகம் தொடக்கம பிரித்தானிய வெளிவிவகார அமைச்சக அலுவலகம் வரைக்கும்,

தமிழ்நாடு முதல்வர் முதல் பிரித்தானிய எதிர்க்கட்சியின் வெளிவிவகாரச் செயலர் வரைக்குமான அனைத்துலக தரப்புகளின் அழைப்புகள் என்றுமில்லாதவாறு வலுப்பெற்று வருகின்றன.

இது தவிர, பொதுவான பொறுப்புகள் என்ற கோட்பாட்டின் கீழ் அமெரிக்காவிலுள்ள மாவட்ட நீதிமன்றமொன்றில் அதிபர் ராஜபக்சவிற்கு எதிராக வழங்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.


யூன் மாதத்தின் முற்பகுதியில் ஜெனீவாவில் இடம்பெற்ற ஐ.நா மனித உரிமைகள் சபையினது கூட்டத்தொடரின் போது சிறிலங்கா தன்னை ஆசுவாசப்படுத்திக்கொள்வதற்கு குறுகிய இடைவெளியே இருந்ததாகச் சந்தேகிக்கப்படுகிறது.

மனித உரிமைச் சபையின் செப்ரெம்பர் மாதக் கூட்டத்தொடர் ஆரம்பமாகும் போது வல்லுநர்கள் குழுவின் அறிக்கையினை அடியொற்றிய தொடர் நடவடிக்கையினை ஐரோப்பிய ஒன்றியம் முடுக்கிவிடக் கூடும்.

இதுபோன்ற சந்தர்ப்பத்தில் சிறிலங்காவிற்கு ஆதரவாக வாக்களிப்பதன் ஊடாக இந்தியா கொழும்பிற்கு அப்பழுக்கற்ற பாதுகாப்பினை வழங்கத் தவறுமிடத்து தற்போது மதில்மேல் பூனையாக நிற்பவர்களும் இந்தியாவின் செல்வாக்குப் பெற்றவர்களும் சிறிலங்காவிற்கு எதிராகவே திரும்புவர் என்பதில் சந்தேகமில்லை.

இடம்பெறக்கூடிய வாக்களிப்பிலிருந்து இந்தியா விலகியிருந்தாலும் நிலைமைகள் கொழும்புக்குப் பாதகமானவையாகவே இருக்கும்.

செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா மனித உரிமைக் கூட்டத்தொடரில் இந்தியா சிறிலங்காவினைப் பாதுகாப்பதை உறுதிப்படுத்தவேண்டுமெனில் புதுடில்லியின் 13வது அரசியலமைப்புச் சீர்திருத்த யோசனையினை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதோடு தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதாவுடனான உறவினைப் பலப்படுத்துவதுதான் ஒரே வழி. செப்ரெம்பரில் இந்தியா சிறிலங்காவினை எவ்வாறு காப்பாற்றப்போகிறது என்பது





சுவாரசியமானதொன்றாகவே இருக்கப் போகிறது.

உலகம் உண்மையிலேயே கடந்த காலத்தினைப் பற்றியல்ல எதிர்காலத்தினைப் பற்றியே அதிகம் கவலையடைகிறது என இந்தப் பத்தியாளர் நீண்ட பல காலமாகவே வாதிட்டுவருகிறார்.

உண்மையில் இது எங்களது போரன்று. விடுதலைப் புலிகள் அமைப்பினைத் தடைசெய்ததன் ஊடாகவும் ஏனைய பல வழிகளிலும் போரின் போது உலகம் எங்களுக்குத் துணையாக நின்றது. தற்போது அமைதிக்காலம். குறித்த சில கரிசனைகளுடனும் சந்தேகத்துடனும் தற்போமைய நிலைமையினை உலகம் பார்க்கிறது. இன்றைய இந்த அமைதிக்காலத்தின் தன்மை இதுதான்.

படைத்துறை அணிவகுப்புகளுடன் போர் முடிவுக்கு வந்த இரண்டாவது நிறைவினை நாங்கள் கொண்டாடிக் கொண்டிருக்கும்போதும் இடம்பெற்று வரும் போருக்குப் பின்னான இன நல்லிணக்க முனைப்புகள் கேள்விக்குள்ளாகிறது. போர் முடிவுக்கு வந்து இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்ட பின்னரும் அவசரகாலச்சட்டம் நடைமுறையில் இருக்கிறது.

போர் நிறுத்தம் நடைமுறையில் இருந்தபோதும் இங்கு அவசரகாலச் சட்டம் இருக்கவில்லை என்பதையும் பின்னர் போர் மீளவும் மூண்டபோது நாங்கள் அதில் வெற்றிபெற்றதையும் நினைவில் வைத்திருக்கவேண்டும்.

போர் முடிந்து இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டபோதும் இன்னமும் வட மாகாணசபைத் தேர்தல் நடாத்தப்படவில்லை. மீள்குடியேற்றத் திட்டங்கள் மந்த கதியிலேயே தொடர்வதாகக் குற்றம் சுமத்தப்படுகிறது.

இந்தியாவின் 50,000 வீடுகளை அமைக்கும் திட்டமும் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை. அரசாங்கமாக இருக்கலாம் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களாக இருக்கலாம் இன்னமும் மக்களுக்கான வீடுகளை கட்டி முடிக்கவில்லை.

வளமும் வலுவுமுள்ள மீள்குடியேறிய மக்களே தங்களது வீடுகளைத் திருத்தியிருக்கிறார்கள் அல்லது புதிதாக நிர்மாணித்திருக்கிறார்கள். ஆனால் எத்தகைய வளமும் இல்லாத பெரும்பாலான மக்கள் தொடர்ந்தும் கூரைவிரிப்புகளின் கீழும் தற்காலிக கொட்டில்களிலுமே வாழ்ந்து வருவதாக வன்னித் தகவல்கள் கூறுகின்றன.

இடம்பெற்ற போரினால் பெரிதும் சிதைந்துபோன நிலையில் இருக்கும் மீன்பிடி மற்றும் விவசாயத் தேவைகளுக்கான வன்னியின் கிராமிய உட்கட்டமைப்புகள் மீள்குடியேறிய மக்களது வாழ்வாதார மேம்பாட்டிற்குத் துணைநிற்பதாகத் தெரியவில்லை.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட மற்றும் போர் முடிவுக்கு வந்து விட்ட இந்த நிலையில் நாட்டினது சமூகங்களைப் பொறுத்த வரையில் தேசிய இன நல்லிணக்கம் அவசியமானதொன்று.

தமிழர்களின் அரசியல் சக்திகள் பிளவுபட்டும் பிரிந்துபோயும் உள்ளன என வாதிடப்படுகிறது. கட்சிகள் என்ற அடிப்படையில் தமிழ்க்கட்சிகள் பிரிந்திருந்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்த் தரப்பில் அதிக ஆசனங்களுடன் இருக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஈ.பி.டீ.பி போன்ற இரண்டு தமிழ்க் கட்சிகளே நாடாளுமன்றில் உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்றன.

அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் டக்ளஸ்கூட 13வது அரசியலமைப்புச் சீர்திருத்தம் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்றே விரும்புகிறார்.

வட மாகாண சபைத் தேர்தல் இடம்பெறவேண்டும் என்றும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராகத்தான் களமிறக்கப்படவேண்டும் என்றும் இவர் விரும்புகிறார்.

வடக்குக் கிழக்கு மாகாணங்கள் மீண்டும் இணைக்கப்படவேண்டும் என ஈ.பி.டீ.பி அழைப்பு விடுத்திருக்கிறது.

13வது அரசியலமைப்புச் சீர்திருத்தமென்பது நாட்டினது அடிப்படைச் சட்டத்தில் ஒரு அங்கமாக ஏலவே இருந்து வருவதோடு அது நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. வடக்கில் சுதந்திரமான தேர்தல் ஒன்று இடம்பெறுவதுதான் தற்போது பாக்கியாக உள்ளது.

# தமிழக சினிமாக் "கூத்து"



இலங்கை மீது பொருளாதாரத் தடைவிதிக்க வலியுறுத்தி ஆளுநர் மாளிகை நோக்கி ஊர்வலம் நடத்த தென்னிந்திய நடிகர் சங்கம் திட்டமிட்டுள்ளது.

இந்தச் செய்தியைப் படித்தவர்கள் அப்போது தமக்கு வந்த சிரிப்பை அடக்கியிருப்பார்களோ தெரியவில்லை.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவை நடிகர்கள் சரத்குமார், சத்யராஜ், மயில்சாமி, நடிகைகள் மனோரமா, குயிலி உள்ளிட்டோர் செவ்வாயன்று சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பின்பின்னர் செய்தியாளர்களிடம் சரத்குமார் கூறிய போதே தமது போராட்டம் குறித்து அறிவித்திருக்கிறார். தனது பிரச்சாரத்தால்தான் நடந்து முடிந்த தேர்தலில் கங்கிரஸ் கட்சி படுதோல்வியைச் சந்தித்தது என்று ஒரு சினிமாக்காரரர் கதையளந்து கொண்டிருக்கிறார். நல்ல காலம் காங்கிரசுடன் கூட்டணி சேர்ந்ததால்தான் பா.ம.க. படுதோல்வி அடைந்தது என்றோ, விடுதலைச் சிறுத்தைகள் தோல்வியடைந்தார்கள் என்றோ சொல்லவில்லை.

யார் முதல்வரானாலும் ஓடிச்சென்று பாராட்டுவிழா செய்து தமது சினிமாக்காரர்களை வைத்து மாபெரும் நிகழ்ச்சி நடத்தும் வழக்கமான விளையாட்டுக்கு ஜெயலலிதா ஒப்புக்கொள்ளவில்லை. அதனால் சினிமாக்காரரகள் இந்த புதிய உத்தியை கையில் எடுக்கிறார்கள் போலும்.

இலங்கை மீது மத்திய அரசு பொருளாதார தடை விதிக்க வேண்டும் என்று சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதற்கு நன்றி தெரிவித்த நடிகர் சங்கத்தினர், இலங்கை அரசு மீது மத்திய அரசு உடனே பொருளாதார தடையை விதிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி ஆளுநர் மாளிகை நோக்கி ஊர்வலம் செல்ல திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளனர்.

அதாவது ஜெயலலிதாவின் தீர்மானத்தை வலியுறுத்தி ஊர்வலம் போனால் முதல்வர் தம்மை பாராட்டுவார். அதனூடாக தமது பாராட்டு விழா முயற்சிக்கு ஆதரவு தருவார் என்று நினைக்கின்றனர் போலும்.

இலங்கை மீது இந்தியா பொருளாதாரத் தடை விதிப்பது இருக்கட்டும், முதலில் நீங்கள் நடிக்கும் படங்களை இலங்கைக்கு விற்பதை நிறுத்தச்சொல்லி, தயாரிப்பாளர்களுக்கு நிர்ப்பந்தங்களை கொடுக்கலாமே! அதற்கான போராட்டங்களையும் நடத்தலாமே!

புலிகள் இலங்கைப் பொருட்களை தமிழ்மக்கள் பகிஸ்கரிக்கவேண்டும் என்று புலம்பெயர்நாடுகளில் போராட்டம் நடாத்துவது போலத்தான இதுவும். போராட்டம் நடத்தும் புலிகளே தாம் நடத்தும் கடைகளில் இலங்கைப் பொருட்களை விற்பதை நிறுத்துவதில்லை.


முதலில் உங்கள் பொருட்களை இலங்கைக்கு விற்பதை நிறுத்துங்கள். பிறகு மற்றவர்கள் விற்பதை நிறுத்தச் சொல்லி கோரிக்கை வைப்போம்.

இது தமிழக முதல்வருக்கும் பொருத்தம்.

-எஸ்.எஸ்.குகநாதன்-

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இணைய ஆசிய, ஆபிரிக்க நாடுகள் பல தயக்கம்

## நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம்



(கொழும்பு)

சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்துடன் இணைவது தொடர்பில் ஆசிய, ஆபிரிக்க நாடுகள் ஆர்வம் காட்டவில்லை என இம் மன்றத்தின் புதிய தலைவரான நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இந்நீதிமன்றத்துடன் இணைவதால் நாட்டின் இறைமை பாதிக்கப்படும் என்பதனாலேயே மன்றத்தின் 50 ஆவது அமர்வில் எந்த தீர்மானமும் எடுக்கவில்லை என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஆசிய, ஆபிரிக்க சட்ட மன்றத்தில் உள்ள நாடுகளுக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தொடர்பிலான விளக்கத்தினை வழங்கும் முகமாக அடுத்த வாரம் மலேசியாவில் பயிற்சிப் பட்டறையொன்றை சர்வேதச குற்றவியல் நீதிமன்றம் ஏற்பாடு செய்துள்ளதாக நீதியமைச்சர் தெரிவித்தார்.

கடந்த ஐந்து நாட்களாக கொழும்பில் நடைபெற்ற ஆசிய, ஆபிரிக்க சட்ட மன்றத்தின் 50 ஆவது மாநாடு தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தாங்கள் எதிர்பார்த்தை விட இம்மாநாடு வெற்றியளித்ததுடன் சர்வதேச பயங்கரவாதம், சர்வதேச வர்த்தக சட்டம், சட்ட விரோத ஆட்கடத்தல், பெண் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற பல விடயங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாக ரவூப் ஹக்கீம் கூறினார்.

இந்தத் தீர்மானங்களை உறுப்பு நாடுகளில் அமுல்படுத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

1952 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஆசிய, ஆபிரிக்க சட்ட மன்றத்தின் ஸ்தாபக நாடான இலங்கை, நான்காவது தடவையாக 50 ஆவது வருடாந்த மாநாட்டை இலங்கையில் கடந்த வாரம் நடத்தியது. இம்மாநாட்டில் 10 நீதியமைச்சர்கள், ஆறு சட்டமா அதிபர்கள் உட்பட பல வெளிநாட்டு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# ரிஸானாவைக் காப்பாற்ற விசேட குழு சவுதிக்கு

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் மரண தண்டனை பெற்றுள்ள இலங்கைப் பணிப்பெண் ரிஸானா நபீக்கை காப்பாற்ற தன்னால் முடிந்த முயற்சிகளை எடுக்கவுள்ளதாக நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கை ஜனாதிபதி சவுதி மன்னருக்கு விடுத்திருந்த கோரிக்கையை நிறைவேற்றுவதற்குக்கூட சவுதி அரேபிய மன்னருக்கு அந்நாட்டு சட்டத்தில் இடமில்லை என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ரிஸானாவை தண்டனையிலிருந்து விடுவிக்க மரணமான குழந்தையின் பெற்றோரினாலேயே முடியுமென அமைச்சர் குறிப்பிட்டார்.

அதனால் குறித்த பெற்றோரிடம் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களை சமரசப்படுத்தவென இலங்கையில் இருந்து குழுவொன்றை அனுப்ப நடவடிக்கை எடுத்து வருவதாக நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறினார்.

# இலக்கிய கர்த்தாக்கள் கிழக்கில் கௌரவிப்பு




(கொழும்பு)

இலங்கை "தடாகம்" கலை, இலக்கிய வட்டத்தினால் கலை, இலக்கிய துறையில் பணியாற்றி வரும் படைப்பாளிகளைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் சாய்ந்தமருது அல்ஹிலால் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

எழுத்தாளர் "கலைமகள்" ஹிதாயா ரிஸ்வியின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதிகளாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான கே.எம்.ஏ.அப்துல் றஸாக், ஏ.எம். ஜெமீல் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் "அகஸ்தியர்" விருதுதினையும், "கலைத்தீபம்" பட்டத்தினையும் பெற்றுக்கொண்ட கவிஞர் யாழ் அஸீம், கவிஞர் மன்னார் அமுதன்,மருதூர் அன்சார், "தமிழ் தென்றல்" அலி அக்பர், கவிஞர் நஜ்முல் ஹுஸைன், கவிஞர் பொத்துவில் அஸ்மின், கவிஞர் கிண்ணியா அமீரலி ஆகியோரை படத்தில் காணலாம்.

# தடுப்பு முகாம் கைதிகளுக்கு விடுதலை வேண்டி மடுத் திருவிழாவில் கூட்டுத் திருப்பலி



தடுப்பு முகாம் கைதிகளின் விரைவான விடுதலை வேண்டி மடுத்திருவிழாவில் மூன்று மறை மாவட்டங்களின் ஆயர்கள் இணைந்து கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுத்தனர்.

சிறைச்சாலைகளிலும் தடுப்பு முகாம்களிலும் துன்புறும் மக்கள் விரைவாக விடுதலை பெறவும் நாட்டின் தலைவர்களுக்காகவும் திருச்சபையின் தலைவர்களுக்காகவும் இத்திருவிழா வேளையில் விசேடமாக வேண்டுவோம் என மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை நேற்று இடம்பெற்ற திருவிழா திருப்பலி வேளையில் அங்கு குழுமியிருந்த பக்தர்கள் மத்தியில் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார்.

நேற்று மடுத்திருப்பதி பெருவிழா மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் தலைமையில் யாழ் மற்றும் சிலாபம் ஆயர்கள் தோமஸ் சவுந்தரநாயகம், இவலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகைகள் ஆகியோர் இணைந்து கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுத்தனர்.

இதன் போது மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தனது தலைமை உரையில் மேலும் தெரிவிக்கையில், நாம் அனைவரும் இந்த தாயினுடைய மண்ணிலே ஒரே குடும்பமாக ஒன்று கூடியிருக்கின்றோம்.

இந்த வேளையிலே பல்வேறு மொழிகளை நாம் பேசி இருந்தாலும் பல்வேறு பின்னணிகளில் நாம் இருந்து வந்திருந்தாலும் நாம் அனைவரும் ஒரே மனதோடு ஒரே குடும்பமாக ஒன்று கூடியிருக்கின்றோம்.

இப்படிப்பட்ட இந்நிகழ்வானது மடுத்திருத்தலத்தில் இடம் பெறுவது எமது நாடு முழுவதும் மக்கள் ஒற்றுமையாகவும் சகோதரத்துவமாகவும் வாழ்வதற்கு முன்மாதிரியாக அமைந்துள்ளது என்பது நம்பிக்கைக்குரியதாகும்.

இந்த வேளையிலே இந்த நாட்டின் விடிவிற்காகவும் சமாதானத்திற்காகவும் அன்னையிடம் வேண்டிக் கொள்வோம். இந்த நாட்டிலே பல்வேறு துன்பங்களுக்கு உட்பட்டவர்களாக இங்கு வந்திருப்பவர்களை நாம் நினைவு கூருகின்றோம்.

சிறைச்சாலைகளிலும், முகாம்களிலும் வாழ்ந்து வருபவர்களுக்கு விடுதலை கிடைக்க வேண்டும் என்றும் வேண்டுகின்றோம். அதற்கு மேலாக எமது மக்கள் சுபீட்சமான வாழ்வு வாழ வேண்டும் எனவும் குறிப்பாக எமது நாட்டை வழிநடத்துபவர்களுக்காகவும் சிறப்பாக திருப்பலியினை ஒப்புக் கொடுப்போம் என மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை மேலும் தெரிவித்தார்.

## முதியவர்களுக்கு விசேட கொடுப்பனவு

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறும் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் தங்கள் பெயர் மற்றும் வயதை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் தொடர்பான விபரங்களை அவ்வப் பகுதி முதியோர் சங்கங்களிடம் சமர்ப்பிக்குமாறு சண்டிலிப்பாய் பிரதேச சமூக சேவை உத்தியோகத்தர் அறிவித்துள்ளார்.

இவர்களுக்கு சமூக சேவைத் திணைக்களத்தினால் விசேட கொடுப்பனவு ஒன்று வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (104)

## சுதந்திரக் கட்சி....

நாடு, விரும்பினால் தமிழர்கள் இங்கு வாழலாம் என்று இவர் முன்பு கூறியதைப் பொருட்படுத்தாமல் ஜனாதிபதித் தேர்தலில் வாக்குகளை வழங்கிய தமிழ் மக்கள் இவர் பேச்சைக் கேட்டு கவலையடைந்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றால் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பார்கள் என்று பிரசாரம் செய்யப்பட்டதற்கு தக்க பதில் தந்திருக்கிறார்தான் ஒரு இனவெறியன் என்பதை மீண்டும் நிலைநாட்டியுள்ளார் என்றும் அந்த அறிக்கையில் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

## டக்ளஸின்...

உங்களது கோரிக்கைகளை ஏற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களுடன் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக வழங்கப்பட்டு வருகிறது.

வடமாகாண முன்பள்ளி ஆசிரியர்களின் தொழிலை நிரந்தரமாக்கவும், அவர்களை புதிய செயற்திட்டம் மூலம் உள்வாங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் எனவும் தெரிவித்த அவர், முன்பள்ளிகளுக்கான கட்டடங்களையும், அதற்குரிய பல நலத்திட் டங்களையும் மேற்கொள்வதற்காக ஜனாதிபதி அவர்கள் பொருளாதார அமைச்சிற்கு பாரிய நிதி ஒதுக்கீட்டைச் செய்துள்ளதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடாக இந் நிதி முன்பள்ளிகளின் அபிவிருத்திக்கு செலவு செய்யப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின், மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தனர். (பா)

## வடமராட்சி கிழக்கு...

கிராமங்களிலேயே இவர்கள் இன்று மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

அத்துடன் மேற்படி பகுதிகளில் காணப்படும் பாடசாலைகள் சிலவும் மீள ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

வத்திராயன் பரமேஸ்வரா வித்தியாசாலை, வத்திராயன் றோ.க.த.க பாடசாலை, கட்டைக்காடு றோ.க.த.க பாடசாலை, கேவில் அ.மி.த.க பாடசாலை ஆகியனவே இன்று முதல் மீள ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. (109,11)

செய்திப்பார்வை

**கட்சிக்குள் பிளவுபடும்; கண்டபடி வாயுளலும்**
**பட்சிபடு நிலையதில் பிரிபவர் - நட்புறுபவர்**
**என்றாலும் இன்னொரு எடுப்பில் பிரிவுறுவதும்**
**நன்றாகத் தெரிந்த நியதி!**



# நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைக்காக சர்வதேச சமூகம் காத்திருக்க வேண்டும்

## யசூசி அகாசி வேண்டுகோள்



(கொழும்பு)

இலங்கையின் நிலைப்பாட்டை சீர்குலைக்காமல் கற்றபாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை வெளிப் படும் வரை காத்திருக்கவேண்டியது சர்வதேச சமூகத்தின் பொறுப் பாகும். என ஜப்பான் வெளியுற வுக்கொள்கை விசேட ஆலோசகர் யசூசி அகாசி தெரிவித்தார்.

அண்மையில் ஜப்பானில் நடைபெற்ற இலங்கை ஜப்பான் வர்த்தகர் ஒத்துழைப்பிற்கான சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யுத்தத்தின் இறுதிக்கட்டம் தொடர்பாக முதலில் உள்நாட்டில் விசாரணை நடத்தவேண்டும். கற்றபாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு இதனை மிகச் சிறப்பாக முன்னெடுத்து வருகிறது என தான் நம்புவதாக அவர் குறிப்பிட்டார்.

எல்.ரி.ரி.ஈ. என்பது உலகின் கொடூரமான பயங்கரவாத அமைப்பு ஒன்றாகும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும் அதனை இலங்கை அரசாங்கத்துடன் எந்தவகையிலும் ஒப்பிட்டுப் பார்க்கமுடியாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அவ்வாறு ஒப்பிட்டுப் பார்த்தால் பயங்கரவாதத்திற்கு எதிரான உலகின் போராட்டத்தை எதிர்ப்பதாக அமைந்துவிடும். அமெரிக்காவும் ஜப்பானும் இணைந்து ஏற்பாடு செய்த டோக்கியோ மாநாட்டை எல்.ரி.ரி.ஈ. அமைப்பு நிராகரித்தது. ஜெனிவா பேச்சுவார்த்தைக்கும் இவ்வாறான நிலையே ஏற்பட்டது. சர்வதேச சமூகம் எப்போதும் பேச்சுவார்த்தை ரீதியாகத் தீர்வுகாணுமாறு எல்.ரி.ரி.ஈ. அமைப்பைத் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்தது. எனினும் அந்த அமைப்பு அதனை நிராகரித்துவிட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# அக்கராயன் மகாவித்தியாலயம் குடிநீர் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி

## அமைச்சர் டக்ளஸ் நிதியுதவி

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயத்தில் நீண்ட காலமாக நிலவிவந்த குடிநீர்ப் பிரசசினையைத் தீர்க்கும் வகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார்.

குடிநீர் வழங்கலுக்குரிய முதற் கட்டமாக இரண்டு இலட்சம் ரூபா நிதியினை வழங்கியுள்ள அமைச்சர், வேலைகளைத் துரிதப்படுத்துமாறும ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திப் பணிகளில் இலங்கை சுவிசேஷ ஐக்கி



யத்துவம் அபிவிருத்திச் சேவை" (LEADS) 225,000 பெறுமதியான குடிநீர் விநியோக அமைப்புப் பொருட்கள் வழங்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது. (121)

# நுளம்பு ஒழிப்புச் சட்டம் மேலும் கடுமையாக்கப்படுகிறது

(கொழும்பு)

நுளம்பு ஒழிப்புச் சட்டத்தின் 14 ஆவது சரத்தை திருத்தியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவினால் உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

டெங்கு நோய்க்கான தடுப்பு மருந்தோ அல்லது தொற்றுக்கு பின்னரான தகுந்த மருந்துகள் இல்லை என்பதால் அதனை கட்டுப்படுத்தும் ஒரே வழி நுளம்பு பெருகும் இடத்தை அழிப்பதாகும.

இதனடிப்படையில் குறித்த புதிய சட்டத்தின் மூலம் அதனை நடைமுறைப்படுத்த சுகாதார அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது.


இந்த சட்ட மூலத்திற்காக அமைச்சரவை அனுமதியை பெறுவதற்காக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

குறிப்பாக குறிப்பிட்ட இடத்தில் நுளம்பு பெருக்கத்திற்கான ஏது நிலைகள் இருப்பதாக தெரிவித்து வழக்கு தொடுக்கப்படுமானால் சாட்சியாக குறித்த இடத்தில் பெறப்பட்ட புகைப்படத்தை சமர்ப்பிக்க இந்த புதிய சட்டத்தின் மூலம் முடியும்.

இந்த புதிய சட்டத்தின் படி எந்தவித அனுமதியும் இல்லாமல் எந்த நேரத்திலும், நுளம்பு பெருக்கம் உள்ள இடங்களை ,பரிசோதனை செய்யும் அதிகாரம் சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கும் பொதுமக்கள் சுகாதார பரிசோதகர்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

எந்த ஒரு நபரும் இந்த நுளம்பு பெருக்கத்தை தடுக்கும் சட்டத்தை மீறியதாக தகவல் கிடைக்கபெறும் எனில் அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவும் இடமுண்டு என்பது குறிப்பிடத்தது.

# யாழ்.புற்றுநோயாளர்களுக்கு உதவ வடக்கிலிருந்து சைக்கிள் பயணம் ஆரம்பம்




(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் புற்றுநோயாளர்களுக்கு தரமான சிகிச்சை வழங்குவதற்காகவும் புற்று நோய்ச் சிகிச்சை முறையினை யாழ்ப்பாணத்தில் நவீனமயப்படுத்தும் முகமாகவும் சுப்பிமணியம் ஸ்ரீகாந்தன் என்ற இளைஞன் யாழ். மாவட்டத்திலிருந்து நேற்று சனிக்கிழமை காலை 10 மணியளவில் கொழும்புக்கு சைக்கிள் பயணம் ஒன்றினை ஆரம்பித்துள்ளார்.

நல்லூர் கோவில் முன்றலில் இருந்து தனது பயணத்தினை குறித்த இளைஞன் நேற்று ஆரம்பித்தார்.

இவர் இன்றைய தினம் வவுனியாவில் இருந்து புத்தளத்துக்கும் நாளை மறுதினம் புத்தளத்தில் இருந்து கொழும்பு நோக்கியும் செல்லவுள்ளார்.

தென்னிலங்கையில் தெய்வேந்திர முனையில் இருந்து பலர் பருத்தித்துறை முனை வரை நடந்து வந்து பல லட்சம் ரூபா நிதியினை சேகரித்து யாழ் புற்றுநோய் சிகிச்சை பிரிவினை நவீனமயப்படுத்த உதவி செய்ய இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## சொல்லாடு களம் ஒத்திவைப்பு

நெல்லியடி மகாவித்தியாலயத்தில் இன்று நடைபெறவிருந்த "சுழலும் சொல்லாடு களம்" எனும் தலைப்பில் அமைந்த பட்டிமன்ற நிகழ்வு எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது என்று நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# சிகரட் கடத்தல் இலங்கையர் இருவர் கைது

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இலங்கைக்குச் சட்டவிரோதமான முறையில சிகரட்டுக்களை கடத்த முயன்ற இரு இலங்கையர்களை இந்திய கியூ பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இராமநாதபுரத்தில் கைது செயயப்பட்ட இவர்கள் இலங்கைக்கு 4இலட்சம் ரூபா பெறுமதியான சிகரட்டுக்களை கடத்த முயற்சித்துள்ளதாக தெரியவருகிறது.

அக்கால் மடத்தைச் சேர்ந்த நாகராஜன் மற்றும் அரியன்குண்டு பிர தேசத்தைச் சேர்ந்த புஸ்பாதன ராஜ் என்ற இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னாருக்கு கடத்தப்படவிருந்த சிகரட்டுக்களையே இந்திய கியூ பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 10 சிகரட் பொதிகள் கைப்பற்றப்பட்டதாகவும் அதன் பெறுமதி 120 000 இந்திய ரூபா எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கப்பல் மூலமாக இந்த சிகரட்டுக்கள் இலங்கைக்கு கடத்தப்படவிருந்ததாக கியூ பிரிவு பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## அலுவலக செய்தியாளர்கள் தேவை

எமது பத்திரிகை நிறுவனத்தில் அலுவலக செய்தியாளராகப் பணியாற்றுவதற்கு அனுபவமும் திறமையும் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புவோர் –

- யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பது விரும்பத்தக்கது. க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
- தமிழ் மொழியில் திறமையும் ஆங்கில/சிங்கள அறிவும் விரும்பத்தக்கது.
- பத்திரிகை நிறுவனங்களில் செய்தியாளராகப் பணியாற்றிய அனுபவம் அல்லது பத்திரிகைத் துறையில் அதீத ஆர்வமும் துடிப்பும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
- வெளிக்கள வேலையில் ஈடுபடத்தக்க உடல் ஆரோக்கியம் உள்ள 35 வயதுக்குட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'அலுவலக செய்தியாளருக்கான விண்ணப்பம்' என்று தவறாமல் குறிப்பிடவும்.
- விண்ணப்பங்கள் அனைத்தும் இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர்


**'ஆளணி முகாமையாளர்'**

**'தினமுரசு' இல 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்**

என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

# தென்னை அபிவிருத்திச் செயற்திட்டம் தென்மராட்சிப் பிரதேசம் தெரிவு

## அமைச்சர் ஜெகத் புஸ்பகுமார அறிவிப்பு



(சாவகச்சேரி)

தெங்கு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழ் முன்னெடுக்கப்படும் "கப்பு காபுரவ" நிகழ்ச்சித்திட்டத்திற்கு யாழ்ப்பாணத்தின் தென்மராட்சிப் பிரதேசம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெங்கு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் ஜெகத் புஸ்பகுமார தெரிவித்தார்.

சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கப்பு காபுரவ நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்ப வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்தும உரையாற்றுகையில்:

குறித்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு மாவட்டத்தில் ஒரு பிரதேசம் தெரிவுசெய்யப்பட்டு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதனடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் தென்மராட்சிப் பிரதேசம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்திருள்ள ஒவ்வொரு குடும்பங்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் தலா 5 தென்னங்கன்றுகள் வீதம் வழங்கப்படும்.

இதன் பின்னர் இரண்டாம் கட்டமாக 2 ஏக்கருக்கு 128 தென்னம்பிள்ளைகள் வீதமும் 3 ஆம் கட்டம் 3 ஏக்கருக்கு 192 தென்னம்பிள்ளைகள் வீதமும் மானிய அடிப்படையில் வழங்கப்படும்.

தென்மராட்சி கிராம சேவையாளர் பிரிவுகளில் சமுர்த்தி உத்தியோகத்தர் உதவியுடன் தெங்கு உற்பத்திச்சங்கங்கள் அமைக்கப்பட்டு அதனூடாகத் தெங்கு உற்பத்தி தொடர்பான பயிற்சிகள், சந்தை வாய்ப்புக்கள், தொழில் நுட்ப ஆலோசனைகள் என்பன வழங்கப்படவுள்ளது.

தெங்கு உற்பத்தியாளர்களுக்குப் பல்வேறு உற்பத்திகளை மேற்கொள்வதற்கு வேண்டிய நவீன உபகரணங்கள் சங்கங்களுக்கு வழங்கப்படும்.

இதன் மூலம் தென்மராட்சியின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதோடு உற்பத்தியினை மேம்படுத்துவன் மூலம் தெங்குப் பொருட்களுக்காக ஏற்றுமதி சந்தை வாய்ப்பை நாடு பெற்றுக் கொள்ளும் எனவும் அவர் மேலும தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச செயலர் அ.சாந்தசீலன், கமத்தொழில் திணைக்கள அதிகாரிகள், கிராம சேவையாளர்கள், உத்தியோகத்தர்கள், தெங்கு உற்பத்தியாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். (11)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 யூலை 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.